விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது ═══ Valampurii ═══

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 01 திங்கட்கிழமை (18.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் அணிதிரளநம் ஆபத்து அதிகம் உண்டு!

## எச்சரிக்கிறார் கோத்தபாய



(கொழும்பு)

வெளிநாடுகளில் விடுதலைப்புலிகள் அணி திரளக்கூடிய வாய்ப்புகள் இருப்பதனால் சட்ட விரோதமாக புகலிடம் கோருவோர் விடயத்தில் அவுஸ்திரேலியா கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ அவுஸ்திரேலிய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா துரோகம் இழைக்கிறது

## வை.கோபாலசாமி ஆக்ரோஷம்

(சென்னை)

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய அரசு துரோகம் இழைத்துவருகின்றது என 71 நாடுகள் பங்கேற்ற பொதுநலவாய விளை யாட்டு விழாவிற்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அழைத்து கௌரவம் அளித்தமை மன்னிக்க முடியாத செயலாகும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இதனால் இந்திய (20ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே அரசாங்கம் நெடியவனை உடனடியாக நாடுகடத்த வேண்டும்

### பேராசிரியர் குணரட்ண கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் வெளிநாடுகளில் இயங்குவதற்கு முனைப்புக் காட்டி வருவதனால், தற்போது விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவரெனக் கருதப்படும் நெடிய வனை நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு பயங்கரவாத எதிர்ப்புத் தொடர்பான நிபு ணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ண தெரிவித்துள் ளார். விடுதலைப் புலிகள் நோர்வே, கனடா போன்ற நாடுகளில் இயங்குவதற்கு முனைப்புக்காட்டி வருகின் றனர்.

எனவே நோர்வேயில் (20ஆம் பக்கம் பார்க்க)



நெடியவன்

## சுவரொட்டி பிரசாரம் தொடரும்-ஜே.வி.பி.

(கொழும்பு)

சுவரொட்டி பிரசாரத்தை அரசாங்கம் தடை செய்தாலும் மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்து சுவரொட்டி பிரசாரத்தை மேற்கொள் ளும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனநாயகமின்மை மற்றும் முன்னாள் இராணுவத் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் பயங்கரவாத பயிற்சி முகாம் கிடையாது

### இந்திய பத்திரிகைக்கு அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் எந்தவொரு பயங்கரவாத அமைப்புக்கும் பயிற்சி முகாம் கிடையாது என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ரைம்ஸ் ஒப் இந்தியா ஆங்கில தினசரிப் பத்திரிகைக்கு அவர் வழங்கிய விசேட பேட்டி ஒன்றில், பாகிஸ்தானிய பயங்கரவாத அமைப் பான லக்ஸர் ஈ தொய்பா உட்பட எந்தவொரு பயங்கரவாத அமைப்புக்கும் இலங்கையில் பயிற்சி முகாம் கிடையாது என்பதை பாதுகாப் பமைச்சு உறுதிப் (20ஆம் பக்கம் பார்க்க)

## த.தே.கூட்டமைப்பினருடன் ஜனாதிபதி விரைவில் சந்திப்பு

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ விரைவில் சந்திக்கவுள்ளதாக அமைச் சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்படி தகவலை தெரிவித்துள்ளார். எனினும் ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பில் தமக்கு எந்தவித அறிவித்தலும் கிடைக்கவில்லைஎனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அவ்வாறான அழைப்பு விடுக்கப்படும் சந்தர்ப் பத்தில் அது தொடர்பில் சாதகமாகப் பரிசீலிக் கப்படும் எனத் தெரிவித்துள்ளது. (ந)

## வட மாகாண அபிவிருத்தி கூட்டம் நாளை வவுனியாவில்


(வவுனியா)

வடக்கு மாகாண அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலை மையில் நாளை வவுனியா இராணுவத் தளத் தில் நடைபெறவுள்ளது.

இதில் அமைச்சர்கள், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள் உட்பட திணைக்களத் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் வடக்கு மாகாணத்தில் அடுத்த வருடம் மேற் (20ஆம் பக்கம் பார்க்க)

## கைலாகு கொடுக்கச் சென்ற போதும் மகிந்தவை கண்டுகொள்ளாத மன்மோகன்



AFP/GETTY IMAGES

### பலத்த அவமானம் என சண்டே லீடர் விபரிப்பு

(கொழும்பு)

அண்மையில் இந்தியாவில் இடம் பெற்ற பொதுநலவாய போட்டிகளின் நிறைவு விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவமதிக் கப்பட்டதாக சண்டே லீடர் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, விழா வின் சிறப்பதிதியாக அழைக்கப்பட்டுள் ளதாக இலங்கை அரசாங்கம் பிரசாரம் செய்து வந்தது. இதன் அடிப்படையிலேயே கடந்த புதன்கிழமை ஜனாதிபதி இந்தியா வுக்கு புறப்பட்டு சென்றார்.

அங்கு (20ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையின் ஆணைக்குழுக்களின் நிலையே ஜனாதிபதி மகிந்தவின் ஆணைக்குழுவுக்கும் நடக்கும்

## த ஸ்ரீலங்கன் கார்டியன் ஆரூடம்

(கொழும்பு)

நாட்டின்முன்னாள்அரசதலைவர்களால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் போலவே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவும் பிரயோசனம் இன்றி கலைந்துவிடும் என த ஸ்ரீலங்கன்கார்டியன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் முதல் முறையாக முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ விசாரணைக்குழு ஒன்றை நியமித்தார். இது கொக்கட்டிச்சோலை ஆணைக்குழுவாகும்.

கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற 152 படுகொலைகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அது அமைக்கப்பட்டது. 1991ம் ஆண்டு பாதுகாப்பு படையினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டமை தொடர்ந்து இந்த ஆணைக்குழு விசாரணை நடத்தியது.

நீதிபதி சிவசெல்லதுரை இதற்கு தலைமை வகித்தார். எனினும் அதன் அறிக்கைகள் எவையும் வெளியாகவில்லை.

பின்னர் நீதிபதி வாசுதந்தர தலைமையில் 1992 – 1993 காலப்பகுதியில் இரண்டாவது ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி உள்ளிட்ட விடயங்கள் குறித்த ஆராய்வதற்காக இந்த குழு நியமிக்கப்பட்டது.

அசெம்பிளி ஒப் கோட், ஈ.டீ.சி, சர்வோதயம் போன்ற பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களின் ஊழல் கள் கண்டு பிடிக்கப்பட்டன. அசெம்பிளி ஒப்கோட், இந்துக்களின் நிலங் களை அபகரித்தமை கண்டுபிடிக்கப்பட்டது. சர்வோதயவின் தலைவர், அதன் நிதியை தமது மகனின் கணக்குக்கு மாற்றி இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த அறிக்கையும் மக்களுக்கு வெளிப்படுத்தப் படாமல் மறைக்கப்பட்டது.

பின்னர் 89 – 90களில் ஜே.வி.பி.யின் வன்முறையின் போது, ரணில் விக்ரமசிங்கவினால், டக்ளஸ் பீரிஸின் துணையுடன் கடவத்தை – பட்லந்தையில் நடத்தப்பட்ட சித்திரவதை முகாம் தொடர்பில் விசாரிப்பதற்கு ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்ட போதும், அதன் அறிக்கைகள் விபரிக்கப்படவில்லை.

அதன் பின்னர் காணாமல் போனவர்கள் தொடர்பில் 1998ம் ஆண்டு ஒரு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. எனினும் அதன் அறிக்கையும் வெளியிடப்படவில்லை

இவை அனைத்து கண்துடைப்பு நடவடிக்கைகளாகவே இருந்தன.

அதேபோன்று, தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஜனாதிபதி ஆணைக்குழுவும் தமது அறிக்கையை பொது மக்களிடம் மறைத்துவிடும் என த கார்டியன் சுட்டிக்காட்டியுள்ளது. (ந–5)

# கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களில் மக்களை மீள் குடியேற்ற நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 பிரதேச செயலகப்பிரிவில் உள்ள 127 கிராம அதிகாரி பிரிவினில் 86 கிராமசேவகர் பிரிவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், அக்கிராமங்களில் மக்களின் மீள் குடியேற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலக கட்டிடத்தில், அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர்தலைமையில்நடைபெற்றது.

துணுக்காய், மாந்தை மேற்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய செயலகப் பிரிவில்உள்ள கிராம சேவகர் பிரிவிலேயே இவ்வாறு கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், புதுக் குடியிருப்பில் சில பிரதேசங்களில் இன்னும் கண்ணிவெடிகள்அகற்றப்படவில்லை என்றும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மக்களின் துரித மீள்குடியேற்றத் துக்கு கண்ணிவெடிகள் அகற்றப்படல் வேண்[டும்] என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

# ஆளுநரின் கையில் அதிகாரம் நாம் எதுவும் செய்யமுடியாது

## கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர்

(கொழும்பு)

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை விட அரசால் நியமிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என கிழக்கு மாகாணக்கல்வி மற்றும் காணி அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

திருகோணமலை இன்ரர் நியூஸ் ஊடக இல்லத்தில் ஊடகவியலாளர்களுக்கு இலவசப் போக்குவரத்து பயண அட்டை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் தங்களால் எந்தவொரு காரியங்களையும் சுயாதீனமாக செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் அதிகாரங்களைதன்கையில்வைத்திருக்கிறார். 40 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட நான் எதனையும் செய்யமுடியாத நிலையில் அதிகாரமற்றவனாக இருக்கிறேன் என அமைச்சர் விமலவீர திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (ந–5)

# 2600 சிறார்களை பிக்குகளாக்க பிரதமர் டி.எம்.ஜயரட்ன நடவடிக்கை

## சிறுவர் உரிமை ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பு

இலங்கையில் அடுத்த வருடம் மே மாதத்திற்குள் 2600 சிறுவர்களை பௌத்த பிக்குகளாக்கும் பிரதமர் டி.எம்.ஜயரத்னவின் திட்டத்தை சிறுவர் உரிமை ஆர்வலர்கள் விமர்சித்துள்ளனர்.

புத்த சாசனத்தை ஊக்குவிக்கவும் சிறார்களை வறுமையிலிருந்து காக்கவும் இந்தத்திட்டம் உதவும், வழி வகுக்கும் எனபிரதமர் கருதுகின்றார். புத்த பகவான் ஞான நிலையை அடைந்த 2600வது வருடபூர்த்தி அடுத்த மே மாதம் அனுஷ்டிக்கப்படுகிறமையை முன்னிட்டு இந்த திட்டத்தை பிரதமர் முன்வைத்துள்ளார்.

இளம் பௌத்த துறவிகள் பல்கலைக்கழகம் வரை சென்று கற்பதற்கு நிதி உதவிகள் வழங்கவும், அவர்களின் குடும்பங்களை பொருளாதார ரீதியல் ஊக்குவிக்கவும் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார். ஆனால், சிறார்களை 10 வயது போன்ற மிகக்குறைந்த வயதில் துறவறம் பூணச் செய்யும் திட்டத்திற்கு சமூக மற்றும் சிறுவர் நல ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். 18 வயதை அடையும் வரை சிறார்கள் அவர்களின் குழந்தைப் பருவத்தையும் இளமையின் குடும்பச் சூழலையும் அனுபவிக்கும் உரிமையை எவருக்கும் பறிக்க முடியாது என்பது சிறார் நல ஆர்வலர்களின் வாதம்.

மூத்த பௌத்தத் துறவிகள் இந்தத்திட்டத்திற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டுமென ஐ.நாவின் சிறுவர் உரிமைகள் குழுவிற்கு இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட டாக்டர்ஹிரந்தி விஜேமான்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

பணக்கார குடும்பத்துச் சிறார்கள் மிக அரிதாகவே இளவயதில் துறவறம் பூணுவதாக தெரிவிக்கின்ற டாக்டர் ஹிரந்தி சிறார்களை துறவறம் பூணச்செய்வது அவர்களின் உரிமைகளை மீறுவதற்குச் சமம் என வாதிடுகின்றார். (ந–5)

# பொன்சேகாவுக்கு அநீதி இழைக்கப்பட்டதா? மனித உரிமைகள் குழு விசாரிக்கும்

(கொழும்பு)

பொன்சேகா மீது இழைக்கப்படும் மனித உரிமை மீறல், தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும். சர்வதேச மனித உரிமைகள் குழு, சர்வதேச நாடாளுமன்றங்களுக்கு இடையிலான மனித உரிமைகள் குழு, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இழைக்கப்பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராயவுள்ளது. குறித்த மனித உரிமைகள் குழுவின் செயலாளர் இக்னேபேக் செச்வாஸ் இதனை தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அண்மையில் இடம்பெற்ற இந்த நாடாளுமன்ற குழு மனித உரிமை குழு கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன முறைப்பாட்டை செய்திருந்தார்.

எனினும் இந்த முறைப்பாடு மனித உரிமைகள் குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கே, குழுவின் செயலாளர், அமைச்சரின் கருத்துக்கு எதிரான தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தநிலையில் சரத் பொன் சேகாவின் விடயம் தொடர்பில் தமது குழு, இரகசியமான முறையில் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ந–5)

# புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அறுவர் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தின் கெக்கிராவையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 6 சந்தேக நபர்களை பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

கெக்கிராவை கலாகரம்பவேவ பிரதேசத்திலுள்ள காணி யொன்றில் இவர்கள் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது பிரதேசவாசிகளிடமிருந்து கிடைத்த இரகசிய தகவலொன்றையடுத்து குறித்த இடத்திற்குச் சென்ற பொலிசார் சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர்.

தொல்பொருளியல் ரீதியில் பெறுமதியான பல பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கையில் இக்குழுக்கள் ஈடுபட்டிருந்தாக சந்தேகிக் கப்படுகிறது.

மற்றொரு சந்தேக நபர் தப்பியோடியுள்ளதாகவும் அவரை கைது செய்வதற்கு கெக்கிராவை பொலிஸாரினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ–2)

# முதலுதவிப் பயிற்சி

(துணுக்காய்)

இலங்கை முதலுதவிச் சங்கத்தின் பயிற்சிப் பட்டறை நாளையும் நாளை மறுதினமும் துணுக்காய் வலயப் பாடசாலைகளிலிருந்து தெரிவாகிய ஆசிரியர்களுக்கு இடம் பெறும்.

காலை 10.00 மணிதொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை நலன்புரிச் சங்க மாவட்ட ஆணையாளர் வை.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ந)

# தமிழ்ப்பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தரம்–13 புதிய பாடத்திட்டத்தில் தமிழ் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளைமுதல் மூன்று நாட்களுக்கு காலை 9.00 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ்வாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இச் செயலமர்வில் சம்பந்தப்பட்ட சகல ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு அவர் கேட்டுள்ளார். (ந–5)

# கூட்டமைப்பின் அலுவலகம் கொழும்பில்

(கொழும்பு)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் நேற்றுக் காலை கொழும்பு பம்பலப்பிட்டியில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று இங்கு கூடுகின்றது. (ந–5)


**தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்**

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)

**விற்பனைக்கு**

வடமராட்சி பருத்தித்துறை வீதி வல்வெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரிக்கும் பொலிகண்டிச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 3 1/2 பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
(2667) T.P : 0775097845

செல்லா சினிமா




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00


Airtel
ஹலோ
யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா
எட்டுத்திக்குகளிலும் வேகமாக பரவும் வலையமைப்பானது
இப்பொழுது வடக்கில் தடம் பதிப்பதில் பெருமிதம் கொள்கிறது



முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் வர்த்தக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜனாப் ரிசாட் பதியூதின் ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகம் வரவேற்புரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். ( படங்கள்:-என்.குமார்)

## ஆயுள்வேத நடமாடும் மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையானது, வலி கிழக்கு பிரதேச சபை மற்றும் கலைமதி சனசமூக நிலையம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் ஆயுள்வேத நடமாடும் மருத்துவ முகாமொன்றை நடாத் தவுள்ளது.

அன்றைய தினம் அனைத்து நோய்களுக் குமான வைத்திய பரிசோதனை நடைபெற்று மருந்துகள் வழங்கப்படவுள்ளன.

ஆகையால் புத்தூர் மேற்கு,புத்தூர் வடக்கு, நவற்கிரி மற்றும் சிறுப்பிட்டி கிராம மக்கள் அனைவரையும் இவ் மருத்துவ முகாமில் கலந்து பயன்பெறுமாறு கலைமதி கிராம அவிருத்தி சங்கத்தின் செயலாளர் செ.ரஞ்சித்குமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை நெல்லியடி ம.ம.வி.அணி சுவீகரித்தது

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டுவிழாவின் உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணத்தை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி கைப்பற்றியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை மின்ஒளியில் இடம்பெற்ற அணிக்கு 7பேர் கொண்ட உதை பந்தாட்ட இறுதிப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியா லய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இரு அணிவீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி கொண்டிருந்தனர். இடைவேளைக்கு முன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி வீரர்கள் அடுத்தடுத்து இரு கோல்களை போட்டு எதிர் அணி வீரர்களை அதிர்ச்சிக் குள்ளாக்கினர்.



இடைவேளையின்போது 2:0 என்ற கோல்கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பித்து நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை மகாஜனாக் கல்லூரி வீரர்கள் தாம் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் அடுத்தடுத்து இருகோல்களைப் போட்டு ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்தனர்.

ஆட்டம் முடிவடையும் தருணத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி மீண்டும் ஒரு கோலைப் போட்டு இறுதியில் 3:2 என்றகோல் கணக்கில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சம்பியனானது.

3ஆம் இடத்துக்கான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மோதிய மானிப்பாய் இந்துக்கல்லூரி 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று மானிப்பாய் இந்துக்கல்லூரி 3ஆம்இடத்தை தட்டிச் சென்றது. (ஸ்ரீ-24)

# வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்ற பகுதிகளிலுள்ள தபால் நிலையங்கள் ஆரம்பம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடங்களில் உள்ள தபால் நிலையம், உபதபால் நிலையங்கள் என்பன மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த 2006 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து இயங் காமல் இருந்த தாழையடி தபால் நிலையம், செம்பியன் பற்று உபதபால் நிலையம், ஆழியவளை உபதபால் நிலையம் என்பன தமது சேவையை மீண்டும் ஆரம்பித்துள் ளன.

மேலும் வட்மராட்சி கிழக்கில் உள்ள ஏனைய உபதபால் நிலையங்களான கட்டைக் காடு (முள்ளியான்) உப தபால் நிலையம், சுண்டிக்குளம் உபதபால் நிலையம் என்பன இன்றும் ஆரம்பிக்கப்படாது உள்ளது.

குறித்த தபால் நிலையங்களுக்கு அண்மையில் உள்ள மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாததினாலேயே இவ்விரு தபால் நிலையங்களும் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் மக்கள் மீள்குடியேற்றம் செய்த பின் ஆரம்பிக்கப்படும் என்று தபால் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-64)




# வடமராட்சியில் விவாகரத்து சம்பவங்கள் அதிகரிப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் அண்மைக்காலமாக விவாகரத்து வழக்குகள் அதிகரித்துள்ளது என்று பருத்தித்துறை நீத வான் நீதிமன்ற பதிவாளர் சின்னத்தம்பி ராஜேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும்தெரிவிக்கையில், அண்மைக்காலமாக வடமராட்சிப் பிரதேங்களில் அதிகமான தம்பதியினர் தமக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகப் பிரிந்து வாழ்வதற்கு சம்மதம் தெரிவித்து பொலிஸ் நிலையங்கள் ஊடாக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்கின்றனர்.

இவர்கள் பிரிந்து வாழ்வதற்கு மறுமணம் செய்தல், இருவருக்கும் ஏற்படும் மனக்கசப்பு மற்றும் சீதனப் பிரச்சினைகள் போன்றவைகளே முக்கிய காரணங்களாகும்.

இதனால் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு நீதிமன்றத்தினால் தீர்க்கப்படுகின்ற பணத்தொகையை நீதிமன்றத்தில் செலுத்தி வருகின்றனர்.

இதில் பெண்களே அதிகமாக கைவிடப் பட்டவர்களாக உள்ளனர்.

எனவே தகுதியான வயதில் திருமணம், வருமானம் பெறக்கூடியவர்களை திருமணம் செய்யும்போது மற்றும்குடும்ப விருப்பத்துடன் திருமணம் செய்தல் போன்றவை காணப்படுமிடத்து இச்சம்பவங்கள் குறைவடையுமென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-24)


# உலக்கையால் தாக்கப்பட்டு இரு இளைஞர்கள் படுகாயம்

(கரவெட்டி)

உலக்கையால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த இரு இளைஞர்கள் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருதரப்பினருக்கிடையில் ஏற்பட்ட தகராறை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. புலோலி மேற்கு கூவக்கரை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, இருதரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற கைகலப்பு வலுப்பெற்றுக் கொண்டிருந்த போது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த நடராசா ரஜீவன் (வயது 25) என்ற இளைஞர் தலையில் பலத்த காயங்களுடனும் மற்றொரு இளைஞன் தங்க வேலாயுதம் சிவரூபன் (வயது 17) என்பவர் கழுத்தில் பலத்த அடிகாயங்களுடனும் சிகிச்சைக்காக மந்திகை ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-24)




யா/ ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்டப் பாடசாலை வேலைப் பகுதி பொறியியலாளர் கு.சிவபாலனை பாடசாலை அதிபர் ந. தெய்வேந்திரராஜா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் அழைத்து வருவதையும் பாடசாலை அ திபர் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவர்களின் கலைநிகழ்ச்சியையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அல்வாய் நிருபர்)

# இன்று ஒரு தகவல்

## நெருப்புக் கோழி

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருத்தர் வந்தார். அவர் ஒரு அறுவைப் பேர்வழி.

"இந்த உலகத்திலேயே இறக்கை இல்லாமல் பறக்கக்கூடியது எது?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

"எனக்கு தெரியவில்லை" என்றேன்.

"என்ன சேர் இது ? இது கூடத் தெரியவில்லையா? மனிதன் தான் அது" என்றார்.

அதுவும் சரிதான் என்று தோன்றுகிறது.

இந்தக் காலத்து மனிதன். எதற்கெடுத்தாலும் பறந்து கொண்டுதானே இருக்கிறான். காலம் அப்படி ஆகிவிட்டது. என்று நினைத்து கெண்டிருக்கும் போதே அடுத்த கேள்வியைக் கேட்டார் அவர்.

" இறக்கை இருந்தும் பறக்க முடியாத பறவை எது?" என்றார். "இதற்கும் பதில் தெரியவில்லை என்று சொல்லி விட்டால் உடனே அடுத்த கேள்வியைக் கேட்க ஆரம்பித்து விடுவார். அதனால் கொஞ்சம் தட்டுத் தடுமாறி ஒரு பதிலைக் கண்டு பிடித்தார்.

"நெருப்புக் கோழி தான் சேர் அது" என்றேன்.

'சரி' என்று ஒத்துக் கொண்டார்.

அதற்குப் பின் அவர் அடுத்த கேள்வியைக் கேட்கவில்லை. ஆனால், அதற்குப் பதிலாகக் அதிலேயே துணைக் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

"நெருப்புக் கோழி நெருப்பைத் தின்னுமா?" என்றார். சரி, இவரிடம் வசமாக மாட்டிக் கொண்டேன் என்று முடிவு செய்தேன்.

அவருடைய கேள்வியிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் அதற்கு ஒரு வழிதான் உண்டு. அதாவது நெருப்புக் கோழியைப் பற்றி எனக்கு என்னென்ன தெரியுமோ அவற்றையெல்லாம் ஒப்புவித்தேன்.

இந்த உலகத்திலேயே மிகப் பெரிய பறவை எதுவென்றால் அது நெருப்புக் கோழி தான். ஏனெனில் அது எட்டடி உயரம் 135 கிலோ எ்டை. அதாவது 2 மூட்டை அரிசியின் எடை.

உலகத்திலேயே மிகவும் பழைமையான உயிரினமும் அதுதானாம். 5 அல்லது 6 கோடி வருடத்துக்கு முன்பே நெருப்புக் கோழி இந்தப் பூமியில் இருக்கிறது என்று உயிரியல் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

அந்தக் காலத்தில் இருந்த பல பிராணிகள் இல்லாமல் போய் விட்டன. ஆனால், நெருப்புக் கோழி மட்டும் இன்னமும் இருந்து கொண்டே இருக்கிறது. என்றால் அது ஆச்சரியம் தான். இருந்தாலும் இப்பொழுது அது அந்தளவுக்கு அதிகமாக இல்லை. மத்திய ஆபிரிக்காவில் தான் இப்பொழுது அது நிறைய இருப்பதாக தெரிகிறது.

எப்பொழுது பார்த்தாலும் இது தீனி தீனி என்று அலைந்து கொண்டே இருக்குமாம். ஒருநாள் இருந்த இடத்தில் மறுநாள் இருப்பதில்லையாம். 30,40 கோழிகள் சேர்ந்து கூட்டம் கூட்டமாகத் தான் செல்லுமாம். பேட்டை விட சேவல் பெரிதாக இருக்குமாம். புல், பூண்டு, கொடி, செடி இதைத்தான் சாப்பிடுமாம். சின்னச் சின்ன புழு, பூச்சி, எலி, பல்லி, ஓணான் ஏதாவது தட்டுப்பட்டாலும் விடாதாம்.

சின்னச் சின்ன கல், கூழாங்கல் என்பவற்றையும் விழுங்கி விடுமாம். நெருப்புக் கோழிக்கு ஒரு குணம் உண்டு.

கண்ணுக்கு பளபளப்பாக ஏதாவது மின்னிவிட்டால் உடனே அதையும் விழுங்கிவிடும். இதே மாதிரித்தான் நெருப்புக் கோழி நெருப்புத் துண்டை விழுங்கும் என்று சொல்வதும் உண்மையில்லை. அது ஒரு மூட நம்பிக்கை.

நெருப்புக் கோழிக்கு பறப்பது தான் சிரமமே தவிர அது ஓட ஆரம்பித்துவிட்டால் பிடிப்பது கஷ்டம். புலி சிங்கத்தையெல்லாம் கண்டுவிட்டால் மணிக்கு 40 கிலோ கிலோமீற்றர் வேகத்தில் ஓடும். வந்து பிடிக்க முடியாது.

இவ்வளவையும் கேட்டதற்குப் பின்னரும் அவர் இன்னொரு கேள்வியைக் கேட்டார்.

"சேர் நீங்கள் கறிக்கோழியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்றார்.

"தெரியுமே. புறொய்லர் என்று சொல்வோமே. அது தானே" என்றேன்.

"ஆமாம். அதுவே தான். இப்பொழுது நான் கேட்பது என்னவென்றால் ஒரு நெருப்புக் கோழியை கறிக் கோழியாக மாற்ற முடியுமா?" என்றார்.

"அதெப்படி முடியும்? அது வேறு. இது வேறு." என்றேன். அவர் "முடியும்" என்றார்.

"எப்படி?" என்றேன்.

"நெருப்பை தண்ணியில் நனைத்தால் கரியாகிவிடுகிறது. அதனால் நெருப்புக் கோழியை தண்ணியில் நனைத்தால் கறிக்கோழியாகிவிடுகிறது" என்றார்.

இப்ப எனக்கு நிஜமாகவே 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓட வேண்டும் போல இருந்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தாய்லாந்தில் தமிழர்கள் கைதானமையின் பின்னணியில் செயற்பட்ட மூன்று நாடுகள்

(கொழும்பு)

அண்மையில் தாய்லாந்தில் கைது செய்யப்பட்ட 155 தமிழ் மக்களின் கைதுகளின் பின்னனியில் கனடாவும் அவுஸ்திரேலியாவும் மற்றும் இலங்கையும் இணைந்து செயற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அவர்கள் கனடாவுக்கு செல்வதற்கு காத்திருந்ததாகவும் இலங்கை அரசுக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைவாகவே கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் தாய்லாந்தில் தங்கியிருந்த ஈழத் தமிழ் மக்களை கைது செய்துள்ளதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## சந்நிதியானின் இரதோற்சவம் நேரடி ஒளிபரப்பு

செல்வச்சந்நிதி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்த்திருவிழாவின் தொகுப்புக் காட்சி நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் 6 மணி வரை இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபன 'ஐ' அலை வரிசையில் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-2-54)

# அமைச்சர் பீரிஸ் இன்று பிரித்தானியா விஜயம்

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இன்று திங்கட்கிழமை பிரித்தானியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

பிரித்தானியாவுக்கு செல்லவுள்ள அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பிரித்தானிய ராஜாங்கச் செயலாளர் வில்லியம் ஹேக், பாதுகாப்புச் செயலாளர் லியாம் பொக்ஸ் மற்றும் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர் பொது நலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவையும் சந்தித்துத் கலந்துரையாடவுள்ளார். (ஸ்ரீ-2)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட கட்டுரைப் போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையினால் தேசிய வாசிப்பு மாதத்தைமுன்னிட்டுவரணி பொது நூலக மண்டபத்தில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கமைய கட்டுரைப் போட்டிகள் தரம் 4,5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இன்று காலை 9.30 மணிக்கும் தரம் 6,7 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கு காலை 10 மணிக்கும் மற்றும் தரம் 8,9 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு காலை 10.20 மணிக்கும் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை தரம் 10,11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு காலை 9.30 மணிக்கும் மற்றும் உயர் தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு காலை 10.30 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு விண்ணப்பித்த மாணவர்களை உரிய நேரத்திற்கு முன்னதாக வருகை தருமாறு நூலகர் பொ. ரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-29)

# இராசி பலன்

*18.10.2010*
*(ஐப்பசி 01, திங்கட்கிழமை)*
*ஏகாதசி பின்னிரவு 12.33 மணிவரை*
*அவிட்டம் பிற்பகல் 12.08 மணிவரை*
*இராகுகாலம் 7.32-9.02 மணிவரை*
*சுபநேரம் 12.02-1.32 மணிவரை*
*ஏகாதசி விரதம்*

**மேடம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வருமானம் திருப்திகரமாக அமையும்.

**இடபம்** பொன்னான செய்திகள் வந்து சேரும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், மாலையில் பொருள் சேர்க்கை ஏற்படும், வரவு திருப்தி தரும், ஆரோக்கியம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், கொடுக்கல், வாங்கல்கள் சீராகும்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து நடப்பது நல்லது. பணக்குறைவு ஏற்படும்.

**சிங்கம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், தொலைபேசித் தகவல் தொலைதூரப் பயணத்திற்கு உறுதுணை புரியும், புதிய நபர்களின் அறிமுகம் கிட்டும்.

**கன்னி** கூட்டு முயற்சி வெற்றி பெறும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரும், உடல்நலம் சீராகி உற்சாகப்படுவீர்கள், கடிதம் இனிய தகவலைச் கொண்டு வரும்.

**துலாம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், வியாபார விருத்தி ஏற்படும், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், மக்கட் செல்வங்களால் மன நிம்மதியுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும், பயணங்களால் பலன் உண்டு, பாராட்டும் புகழும் அதிகரிக்கும்.


**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**மகரம்** பணம் பல வழிகளிலும் வந்து சேரலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், திருமணப் பேச்சுக்கள் முடிவாகலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள், உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை நாடுவீர்கள்.

**மீனம்** உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு உட்பட நேரலாம், தொழில் வியாபாரத்தில் சிறு மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், தூரதேசச் செய்தி ஆச்சரியப்பட வைக்கும்.

**வளவன்**



நாவலர் வீதியில் அமைந்துள்ள 'வீணாவிஹார்' இசை மண்டபத்தில் நவாரத்திரி விழாவையொட்டி கொலு வைத்திருக்கும் காட்சியை படத்தில் காணலாம். இதனை கலாவித்தகர் செல்வி விஜயலட்சுமி சண்முகராஜா ஒழுங்கமைத்திருந்தார். (படங்கள்:-இருபாலை நிருபர்)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 40 |
| தக்காளி | 80 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 70 | 60 | 60 |
| கரட் | 70 | 50 | 40 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 30 | 25 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 80 |
| பாகற்காய் | 140 | - | 90 |
| வெண்டிக்காய் | 90 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 60 | 40 |
| பயற்றங்காய் | 110 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 30 | 30 | 40 |
| கறிமிளகாய் | 100 | 100 | 60 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 90 |
| போஞ்சி | 150 | - | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 40 |

# உங்கள் மேன்மையை மேம்படுத்துங்கள்...

நம்மில் பலர் தற்போது உள்ள நிலைமையில் இருந்து இன்னும் அதிகமாக மேம்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பர்.நாம் பெற்றிருக்கும் மகிழ்ச்சி, அழகு, செல்வம், அறிவு, வெற்றி, அன்பு மற்றவர்களிடம் நாம் பெற்றிருக்கும் பெயர், படிக்கும் பாடம், செய்யும் தொழில், நம்முடைய உறவுகள் என அனைத்திலும் தற்போதைய நிலையை விட மேம்பட்டு இருக்க வேண்டும் என விரும்புவோம்.

ஆனால் நாம் அதில் வெற்றி காண இயலாமைக்கு முக்கிய காரணம், நம்முடைய மனப்பான்மையை அடக்கியாள இயலாததாகும். நம்முடைய மேன்மையை மேலும் மேம்படுத்த சில வழிகளை இங்கு காண்போம்.

- உங்களை விட மேம்பட்ட நிலையில் இருக்கும் நண்பர்கள், உறவினர்களுடன் உங்களை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். ஏனெனில் அவ்வாறு ஒப்பிட்டு பார்க்கையில் உங்கள் மனதில் தாழ்வு மனப்பான்மையும் போதாமைக் குணமும் ஏற்படும்.
- உங்களுடைய செயல்களில் நீங்களே குற்றம் காணாதீர்கள்.
- தற்போது நீங்கள் பெற்றிருக்கும் நிலைமையை எண்ணி மிகவும் பெருமைகொள்ளுங்கள். இது உங்கள் எண்ணங்களில் இருந்து முரண்பட்டதாக தெரிந்தாலும் இந்த எண்ணமே உங்களை மேம்படுத்த முதற்படியாக விளங்கும்.
- உங்களிடம் உள்ள நல்ல குணங்களை பட்டியலிடுங்கள். உங்களை நீங்களே மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.
- உங்களுடைய எண்ணங்களில் உண்மையாக இருங்கள். உங்களுடைய எண்ணங்கள் தகுதியில்லாததாக தோன்றினால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள்.
- உங்களுடைய முன்னேற்றத்தில் தாமதம் ஏற்படுவது இயற்கை. அவற்றிலிருந்து உங்கள் குறைகளை அறியுங்கள். அது அடுத்த கட்டத்திற்கு உதவியாக இருக்கும்.
- வெற்றி,தோல்வி இரண்டையும் மன அமைதியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- வாழுங்கள், மற்றவரை வாழவிடுங்கள்.
- ஒருவர் மற்றவரை விட தாழ்ந்தவரும் இல்லை, மேம்பட்டவரும் இல்லை என்ற எண்ணத்தை மனதில் பதிய வையுங்கள். ஒவ்வொரு மனிதனும் தங்களுக்கென்று தனித்துவம் பெற்றிருப்பர்.
- அதிகாரத்தைக் கொண்டு கலகம் செய்யாதீர்கள் நட்பானவராக திகழுங்கள்
- அளவான பொறுமை கொள்ளுங்கள்.
- நீங்கள் செய்த குற்றங்களையும் தவறுகளையும் அடுத்தவர் மீது திணிக்காதீர்கள்
- மற்றவர்களை இழிவுபடுத்தாதீர்கள்.
- அவசியமான செயல்களுக்கு மட்டும் திட்டமிட்டு செயற்படுங்கள்
- வாக்குவாதத்தினால் ஒரு செயலில் வெற்றி காண இயலாது மற்றவர்கள் கூறும் கருத்துக்களுக்கு செவி கொடுங்கள். அதில் உண்மை இருக்கும் பட்சத்தில் மனதார ஏற்றுக்கொள்ளுங்கள்.
- வெளித்தோற்றத்தின் அடிப்படையில் மற்றவர்களை எடைபோடாதீர்கள்.

மேற்கூறிய சில வழிகளை கடைப்பிடித்து உங்களுடைய மேன்மையை மேம்படுத்த முயலுங்கள் வெற்றி காணுங்கள்.

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# கூச்சத்தைதவிர்க்க...

பொதுவாக நம்மில் பலருக்கு முக்கியமான சந்திப்புக்களின் போது புதிய நபர்களைஅணுகுவதில் பிரச்சினை எழுகிறது. இதனால் நல்லவாய்ப்புக்களை நாம் இழக்க நேரிடுகிறது.

எடுத்துக்காட்டாக நேர்முகத்தேர்வின் போதும், வியாபாரச் சந்திப்புக்களின் போதும் கூச்சத்தால் நாம் பல வாய்ப்புக்களை இழக்கிறோம். இதனால் நமது வளர்ச்சி தடைப்படுகிறது.புதிய நபர்களை சந்திக்கும் போது ஏற்படும் கூச்சத்தால் அசௌகரியமாக உணர்கிறோம். கூச்சத்தை போக்குவதற்கான சில வழிகளை நாம் இங்கு காண்போம்.

**உங்களுக்கு நீங்களே ஒத்துழைப்பு கொடுங்கள்:** ஒரு செயலைத் தங்களால் செய்து முடிக்க முடியும் என உங்களுக்கு நீங்களே ஒத்துழைப்புக்கொடுங்கள். இதன் மூலம் தங்களது அறிவு வளர்ச்சி பெற்று குணாதிசயங்கள் மாற வாய்ப்பிருக்கிறது.

**எளிமையாக பேச ஆரம்பியங்கள்:** புதிய நபருடன் பேச ஆரம்பிக்கும் போது தங்களுக்கு தெரிந்த எளிமையாக விடயங்களைக் கொண்டு உரையாடலை ஆரம்பியுங்கள். இதனால் பதட்டம் குறைந்து அந்த உரையாடல் சிறப்பானதாக அமையும்.

**நண்பர்களுடன் ஆழ்ந்து உரையாடுங்கள்:** நண்பர்களுடன் ஆழ்ந்து மனம் விட்டுப் பேசுவதால் தங்களது பேசும் திறன் கூடும். இதனால் புதிய நபர்களிடம் உரையாடுவது எளிமையாக இருக்கும். மேலும் நண்பர்களிடம் உணர்ச்சி பூர்வமாக உரையாடுவதன் மூலமாக தங்களது தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**எந்த நிலையிலும் ஆயத்தமாக இருங்கள்:** ஒரு முக்கியமான உரையாடலுக்கு அல்லது நேர்முகத் தேர்வுக்கு கலந்துகொள்ள எந்தநிலையிலும் ஆயத்தமாக இருங்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும், தங்களுக்கு தெரிந்த விடயங்களை தைரியமாக எடுத்துக்கூறப் பழகிக் கொள்ளுங்கள்.

**சூழ்நிலைகளை தவிர்க்காதீர்கள்:** ஒரு சந்திப்பிலோ அல்லது நேர்முகத் தேர்விலோ கலந்து கொள்ளாமல் தவிர்ப்பது மிகவும் தவறான செயல்.எந்த சூழ்நிலையாக இருந்தாலும் அதை தைரியமாக எதிர்கொள்ள பழகிக் கொள்ள வேண் டும். இதனால் தங்களது தன்னம்பிக்கை அதிகரித்து, வாழ்வில் எளிதில் சாதிக் கலாம்.

# DMI COMPUTER EDUCATION இன் கணனி கற்கைநெறிகள்



DMI COMPUTER EDUCATION நிறுவனம் தரமானதும் முழுமையானதுமான கணனி தகவல் தொழில்நுட்பக் கல்வியை சிறந்த முறையில் வழங்க கல்விச் சமூகத்தினதும் மாணவர்களின தும் பாராட்டைப் பெற்று கணனிக் கல்விக்கு தனித்துவமான நிறுவனமாக திகழ்ந்து வருகின்றது.

DMI COMPUTER EDUCATION இனால் வழங்கப்படும் சான்றிதழ்களானது இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களாகும்.இதன் ஊடாக மாணவர்கள் தமது தகவல் தொழில்நுட்பக் கல்விக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை பெற்றுக்கொள்வதோடு சர்வதேச தகவல் தொழில்நுட்ப உலகில் கால்பதிப்பதற்கும் எதிர்காலத்தை வளமானதாக மாற்றிக் கொள்வதற்கும் DMI COMPUTER EDUCATION வழிவகுத்துள்ளது.

காலத்தின் தேவைக்கேற்ப மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்துறையில் சிறந்து விளங்குவதற்கு ஏற்ற வகையிலும் நவீன தொழில்நுட்பங்களையும், தேசிய மற்றும் சர்வதேச பாடவிதானங்கள் - நியமங்கள் என்பவவற்றை முற்றுமுழுதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் கற்கை நெறிகள் யாவும் உள்நாட்டு , சர்வதேச தொழிற் சந்தைக்குஏற்பவும் சர்வதேச / உள்நாட்டு பல்கலைக்கழ கங்களில் உயர் கல்வியைத் தொடர இருக்கும் மாணவர்கள் தங்கள் உயர்கல்வியை சிறப் பாக ஆரம்பிப்பதற்கும் உறுதுணையாக அமைகின்றது.

DMI COMPUTER EDUCATION ஆனது கல்விச் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்று முன்னணியில் திகழ் வதற்கு,

- காலத்தோடு இணைந்த தொழில்சார் கணனிக் கற்கைநெறிகள்
- சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட கணனி ஆய்வுகூடம்
- வரையறுக்கப்படாத கணனி செய்முறைப் பயிற்சிகள்
- பாடத்தோடு இணைந்த சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இலவசப் பாடநூல்கள் மற்றும் இணைய பயன்பாட்டு வசதிகள்
- மறைமுகக் கட்டணம் எதுவுமில்லாத இலகு தவணைக்கட்டண வசதி
- ஒவ்வொரு மாணவரின் கற்கைநெறி தொடர்பில் தனிப்பட்ட கவனம்
- இலவசக் கல்வி வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் என்பன சில காரணங்களாக அமைகின்றன...

**மல்ரிமீடியா கற்கைநெறிகள்**

DMI COMPUTER EDUCATION இன் நவீன தொழில்நுட்பங்கள் Advanced Software களினையும் உள்ளடக்கிய கிராபிக்ஸ் 2D,3D அனிமேசன் , மல்ரிமீடியா பயிற்சி களை அதிக பணம் செலுத்தி கற்க வேண்டும் என்ற எண்ணத்தை இல்லாதொழித்து அனைவருக்கும் குறைந்த கட்டணத்தில் தரமான பயிற்சி வழங்கி வருகின்றது.

இக் கற்கை நெறிகளுக்கு எண்ணற்ற அயல்நாட்டுக் கம்பனிகள் அற்ரைய்ஸ்சிங், கிரபிக்ஸ் கம்பனிகளில் அதிக சம்பளத்துடன் வேலை வாய்ப்புக்களை வழங்கிவருகின்றது. இவ் அரிய வாய்ப்பினை DMI COMPUTER EDUCATION இல் பயில்வதன் ஊடாக சர்வதேச நிறுவனங்களின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களைப் பெற்று இவ்அரிய சந்தர்ப்பங்களை தட்டிச்செல்லுங்கள். மேலும் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபவதற்குமான சிறந்த தகமையினை உருவாக்கித்தருகின்றது. இக் கற்கை நெறியானது மல்ரிமீடியா துறையில் அனுபவம் வாய்ந்தவர்களினாலும் அத் துறையில் சிறந்த படைப்புக்களை உருவாக்கியவர்களாலும் யாழ்.மண்ணிலே மேற்கொள்ளப்படுகின்றது. நவீன தொழில் நுட்பத்துடன் நமது ஒளிந்திருக்கும் படைப்பாற்றலையும் கலையம்சங்களையும் வெளிக் கொண்டு வர மல்ரிமீடியா பயிற்சி ஒரு வரப்பிரசாதமாகும்.

**வீட்டா ஆங்கிலப் பயிற்சி**

காலத்தின் தேவை கருதி சர்வதேச மொழியான ஆங்கிலமொழிப் பயிற்சியை வழங்கும் நோக்குடன் 27 வருடங்களாக ஆங்கில மொழிப்பயிற்சியை வழங்கி 25 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கேற்றிய ஆசியாவின் முதல் நிலை வகிக்கும் ISO:9001:2008Company வீட்டா ஆங்கில பயிற்சிமையத்தின் ஆங்கிலப் பயிற்சி யாழ் மண்ணில் DMI COMPUTER EDUCATIONஇல் ஆரம்பிக்கப்பட்டு சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது.

இப் பயிற்சி **வீட்Ih Foundation**, **வீட்டாFluent English First Step**, **வீட்டாFluent English Next Setp** என மூன்று படி நிலைகளை கொண்டது.

**வீட்டா ஆங்கிலப் பயிற்சியின் தனி சிறப்பம்சம்**

- இலக்கணத்தை பாட ரீதியில் கற்பதை விட செயல் முறை பயிற்சிகளில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.
- பல்வேறு சூழல்களில் தன்னம்பிக்கையுடன் பேசவும் மற்றும் செயற்படவும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது.
- பங்கு பத்திரங்கள், சிற்றுரைகள் மற்றும் குழு கலந்துரையாடல்கள் போன்றவைகளின் வ்ழியாக பயிற்சியளிக்கப்படுகிறது.
- கூடுதலாக பேச்சுமுறை, உடல் மொழி, குழுத்தன்மைகள் மற்றும் தனி நபர் திறன்கள் ஆகியவைகளின் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- இறுதியாக மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பாதையை தன்னம்பிக்கையுடன் தேர்ந்தெடுக்க உதவும் வகையில் பாடத்திட்டம் அமைந்திருக்கும்.
- நிபுணர் குழுவால் உருவாக்கப்பட்டுள்ள வீட்டா பாட திட்டம் அன்றாட ஆங்கில கட்டமைப்பு மற்றும் வார்த்தைகளின் ஒவ்வொரு பகுதியும் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும். பல வீட்டுப் பயிற்சிகளை கொண்டிருக்கும் இப் பாடத்திட்டம் மாணவர்களுக்கு சிறப்பான மொழிப் பழக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும்.
- யாழில் முதன்முறையாக Online பயிற்சி பாடங்கள் (கணனி ஊடான ஒலி-ஒளி வாயிலான பயிற்சிப்பாடங்கள்) 100% வெற்றியளித்த செய்முறை.
- சிங்கப்பூரில் இருந்து பிரித்தானிய முறைக்கமைவாக் வடிவமைக்கப்பட்ட பாடவிதானங்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் மற்றும் சர்வதேச சான்றிதழ்கள்.
- தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில கல்வியை DMI COMPUTER EDUCATIONஇன் யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடி கிளைகளில் பயின்று உங்கள் வாழ்க்கையினை வளமானதாக்கிக் கொள்ளுங்கள்.

## வர்த்தகர் ஒருவரை கடத்தி கப்பம் கோரிய இராணுவ மேஜர் கைது

(கொழும்பு)

வர்த்தகர் ஒருவரை கடத்தி அவரிடம் கப்பம் கோரிய இராணுவ மேஜர் ஒரு வரை பொலிஸார் கைது செய்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரபல நகை வியாபாரி ஒருவரைக் கடத்திச் சென்று 50 மில்லியன் ரூபா கப்பம் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கடத்தல் மற்றும் கப்பம் கோரலை மேற் கொண்ட இராணுவ மேஜருடன் மேலும் இரண்டு நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்ட வர்த்தகரிட மிருந்து குறித்த கும்பல் ஏற்கனவே 20 மில்லியன் ரூபாவினை கப்பமாகப் பெற்றுக்கொண்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது மகனை பாடசாலைக்கு அழைத்துச் சென்ற போது கடத்தல்காரர்கள் குறித்த வர்த்தகரை கடத்திச் சென்றுள்ளனர். 50 மில்லியன் ரூபா கப்பமாக வழங்குமாறு குடும்பத்தாருக்கு உத்தர விடுமாறு கடத்தல்காரர்கள் வர்த்தகரை வற்புறுத்தியுள்ளனர்.

எனினும் அவ்வளவு பெரிய தொகை பணத்தை தமது குடும்பத்தாரினால் திரட்ட முடியாது எனவும் நகைக் கடைக்கு தாம் சென்றால் மட்டுமே பணத்தை திரட்ட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் கடுமையான நிபந்தனைகள் மற்றும் கொலை மிரட்டலுடன் குறித்த வர்த்தகரை பொலிஸார்விடுதலைசெய்துள்ளனர்.

முன்னணி தனியார் வைத்திய சாலை ஒன்றில் வைத்து கப்பப் பணத்தை இராணுவ மேஜரிடம் குறித்த வர்த்தகர் ஒப்படைத்தாகவும் சிவில் உடையணிந்திருந்த புலனாய்வுப்பிரிவினர் இராணுவ மேஜரை கைது செய்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ மேஜருடன் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டதாகவும் மேலும் இரண்டு போரை பொலிஸார் தேடி வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## சிகரெட் வடிவத்தில் பொதி செய்யப்பட்ட போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது

பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைத்தலை ஊக்குவிக்கும் விதத்தில் சிகரெட் வடிவத்தில் பொதி செய்யப்பட்ட போதை மாத்திரைகளை உள்ளடக்கிய 14ஆயிரம் சிகரெட்டுகளையும் சந்தேக நபர் ஒருவரையும் அலவத்துகொடை பொலிசார் கைது செய்துள்ளனர்.

அக்குறணை நகரில் வியாபார ஸ்தலம் ஒன்றில் இருந்து கைப்பற்றப்பட்ட சிகரெட் வடிவத்தில் தயாரிக்கப்பட்டிருந்த இத்தயாரிப்பு ஒன்றுக்குள் 25 வில்லைகள் அடங்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

பாடசாலைகளுக்கு அருகே விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இத் தயாரிப்புக்குள் காணப்படும் வில்லைகள் இனிப்பு மற்றும் புளிப்பு சுவைகளை கொண்டதாகும். அவ் வில்லைகளை பாடசாலை மாணவர்கள் பாவிப்பதன் மூலம் மாணவர்கள் சிகரெட் பாவனைக்கு பழக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் பொலிசார் கூறுகின்றனர்.

கண்டெடுக்கப்பட்ட வில்லைகளில் ஏதேனும் போதைப்பொருட்கள் உள்ளடக்கப் பட்டிருக்கின்றனவா என்பதை பரிசோதனை செய்வதற்கு அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைக்கவுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரைக் கண்டி மேலதிக நீதவான் தனூஜா ஜயதுங்க முன் மாலை ஆஜர் செய்யப்பட்ட போது நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்.

மத்திய மகாணத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் ஆலோசனைக்கு அமைய அலவத்து கொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிஷாந்த ஹெட்டியாரச்சி உட்பட பொலிஸ் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை நடாத்துகின்றனர். (ஸ்ரீ-2)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 இற்கு புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதியும் குடியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 31ஆம் திகதியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழு அதிருப்தி

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர் பான ஆணைக்குழு அரச சார் பற்ற அமைப்புகளிடம் தமது பொறுப்புகள் தொடர்பான அறிவுறுத்தல் ஒன்றை வழங்கியுள்ளது.சில அரச சார்பற்ற அமைப்புகள் ஆணைக் குழுவின் முன்னி லையில் சாட்சியம் அளிக்க முன் வராததுடன் ஏற்கனவே சாட்சியம் அளித்தவர்களை விமர்சிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆணைக் குழுவின் நடவடிக்கைகளை அதன் செயற்பாட்டு பெறு பேறுகளின் மூலமே கணிக்க வேண்டுமே தவிர அதனை முன் கூட்டி தீர் மானத்துக்கு வரக்கூடாது எனவும் ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள் ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவினால் அரச சார் பற்ற அமைப்புக்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதங்களிலேயே இந்த விடயம் விபரிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் முன்னால் சாட்சியம் அளித்த நூற்றுக்கணக்கான பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கு இந்த அரச சார் பற்ற அமைப்புக்கள் அநாவசியமாக விமர்சித்துள்ளமை தமக்கு கவலை அளித்துள்ளதாகவும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் ஆணைக் குழு தமது அதிகார வரையறைக்கு உட்பட்ட வகையில் சுதந்திரமாகவே இயங்குவதாகவும் சாட்சியங்களின் கருத்துக்கள் தொடர்பாக தொடர்ந்தும் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள் ளது. (ஸ்ரீ-2)

## தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை விற்பனை செய்தவர்கள் கைதாகினர்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட மீன்பிடி வலைகளை தமது வியாபார நிலையங்களில் வைத்து விற்பனை செய்தார்கள் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களை சரீரப்பிணையில் செல்வதற்கு மன்னார் நீதிவான் அனுமதியளித்திருக்கின்றார்.

கொழும்பிலிருந்து மன்னாருக்கு வருகை தந்த கடற்றொழில் திணைக்களத்தைச் சேர்ந்த பிராந்திய கடற்றொழில் பரிசோதகர் நீல் மொண்டக்கியூக் தலைமையிலான குழுவினர் கடந்த 14 ஆம் திகதி அன்று மன்னார் நகர வர்த்தக நிலையங்களில் இருந்து குறித்த நபர்களைக் கைது செய்திருக்கின்றார்கள்.

மேற்படி குழுவினர் மன்னாரில் உள்ள நான்கு வியாபார நிலையங்களில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது மூன்று கடைகளில் கடற்றொழிலின் பயன்பாட்டுக்கு தடைசெய்யப்பட்ட 42 மீன்பிடி வலைகளையும் கைப்பற்றியதோடு அதனை விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூன்று நபர்களையும் கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் கடந்த 15 ஆம் திகதி மன்னார் நீதிவான் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் கே.ஜீவராணி தடைசெய்யப்பட்ட வலைகளை விற்பனை செய்ததாகச் சொல்லப்படுபவர்களை தலா இருபதாயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்வதற்கு அனுமதித்துள்ளதுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி வழக்கு விசாரணைகளுக்காக நீதி மன்றில் மீண்டும் ஆஜராகுமாறு உத்திரவிட்டார். (ஸ்ரீ-2)




- 1356 - சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற நிலநடுக்கம் அதன் பேசல் நகரை முற்றாக அழித்தது.
- 1860 - இரண்டாவது ஒப்பியம் போர் முடிவுக்கு வந்தது.
- 1867 - ரஷ்யாவிடம் இருந்து அலாஸ்கா மாநிலத்தை ஐக்கிய அமெரிக்கா 7.2 மில்லியன் அமெரிக்க டாலர் விலை கொடுத்து வாங்கியது. இந்நாள் அலாஸ்கா நாள் எனக் கொண்டாடப்படுகிறது.
- 1898 - ஐக்கிய அமெரிக்கா புவெர்ட்டோ ரிக்கோவைக் கைப்பற்றியது.
- 1908 - பெல்ஜியம் கொங்கேவைக் கைப்பற்றியது.1912 - முதலாம் பால்க்கான் போர் ஆரம்பமாகியது.
- 1929 - கனடாவில் பெண்களும் மனிதர்கள் என சட்டபூர்வமாக எழுதப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஹிட்லரிடமிருந்து ஜெர்மன் தேசிய இராணுவத்தை அமைப்பதற்கான கட்டளை பிறந்தது.
- 1944 -சோவியத் ஒன்றியம் செக்கொசுலவாக்கியாவை முற்றுகையிட்டுக் கைப்பற்றியது.
- 1945 - வெனிசுவேலாவில் இடம்பெற்ற இராணவப் புரட்சியை அடுத்து அதன் அதிபர் பதவியிழந்தார்.
- 1951-இங்கிலாந்தில் பளிங்கு அரண்மனையில் அனைத்துலக வர்த்தகக் கண்காட்சி முடிவுற்றது.
- 1954 - டெக்சாஸ் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் முதலாவது டிரான்சிஸ்டர் வானொலியை அறிமுகப் படுத்தியது.
- 1967 - சோவியத் விண்கலம் வெனேரா 4 வீனஸ் கோளை அடைந்தது. வேறொரு கோளின் வளி மண்டலத்தை அளந்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1991 - அசர்பைஜான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்து விலகியது.
- 1991 - நாகப்பட்டினம் மாவட்டம் அமைக்கப்பட்டது.
- 2006 - காலி கடற்படைத்தளத்தில் கடற்புலிகள் தாக்குதல் நடத்தினர்

### பிறப்புகள்

- 1910 - வி.நவரத்தினம், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் (இ. 2006)
- 1956 - மார்டினா நவரதிலோவா, டென்னிஸ் வீராங்கனை
- 1960 - ஜான் குளோட் வான் டாம், நடிகர்
- 1978 - ஜோதிகா, இந்தியத் திரைப்பட நடிகை

### இறப்புகள்

- 1871 - சாள்ஸ் பபேஜ், பிரித்தானிய கணிதவியலாளர் (பி. 1791)
- 1931 - தோமஸ் அல்வா எடிசன், அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் (பி. 1847)

**1922 - பி.பி.சி வானொலி ஆரம்பிக்கப்பட்டது.**



# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2010 முதல் 16.11.2010 வரை




(அவிட்டம் 3, 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்)

**மற்றவர்களுக்கு உதவி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு உயர்ந்த நிலையை அடையும் கும்ப இராசி நேயர்களே!**

பெற்றோர்களின் அரவணைப்பு உங்களுக்குக் குறைந்திருந்தாலும், பிற இனத்தாரின் ஒத்துழைப்பு உங்களுக்கு எப்போதும் உண்டு. தன்னம்பிக்கை உங்களுக்கு குறைவாகத்தான் இருக்கும். மேலும், மற்றவர்களையும் முழுமையாக நம்பமாட்டீர்கள். இதனால், நீங்கள் பிரச்சினைகளை அடிக்கடி சந்திக்கக் கூடியவர்கள். பிடிவாத குணத்தை நீங்கள் தளர்த்திக் கொண்டால், பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம்.

இம்மாத கிகர நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே ஆறுக்கு அதிபதி சந்திரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே, எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றால் வரும் பிரச்சினைகளை இம்மாதம் சந்திக்க நேரிடலாம். அதற்கு அணை கட்டும் விதத்தில் பரிகாரங்களை நீங்கள் செய்து கொள்வது நல்லது.

குறிப்பாக, பஞ்சம ஸ்தானத்தில் கேதுவும், பதினோராமிடத்தில் ராகுவும் இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும் என்றாலும், பிள்ளைகளால் திடீர் திடீரென பெரும் செலவுகளும் உருவாகும். குரு வக்ர நிலையில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. தனாதிபதி வக்ரம் பெறுவதால், கொடுக்கல் -வாங்கல்களில் பிரச்சினைகள் உருவாகி மறையும். பாக்கிகள் வசூலாகாமல் நிற்கலாம்.

**தொழில் வளம் பெருகும் நேரம்!**

எதிர்வரும் 20ஆம் திகதி விருச்சிக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, தொழில் ஸ்தானம் வலுவடைகிறது. எனவே, மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்பு விழா காண்பீர்கள். மூத்த சகோதரர்களில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். மாடி, மனை கட்ட வேண்டுமென்ற எண்ணம் பூர்த்தியாகும். விருச்சிக செவ்வாயின் ஆதிக்க காலத்தில் வியக்கும் செய்திகள் ஏராளமாக வந்து சேரும். அங்காரக வழிபாடும் இக்காலத்தில் மேற்கொள்வது நல்லது.

**கவனமுடன் செயல்பட வேண்டிய நேரம்!**

எதிர்வரும் 31ஆம் திகதி விருச்சிக இராசியில் ,புதன் சஞ்சரிக்கப்போகிறார். அஷ்டமாதிபதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, திடீர் இழப்புகளைச் சந்திக்க நேரிடும். உடனிருப்பவர்களால் தொல்லை ஏற்பட்டு, உத்தியோக மாற்றம் கூட ஒரு சிலருக்கு உருவாகலாம். வாகனப்பழுதுகள் அதிகரிக்கும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் உருவாகி மனநிம்மதி குறையலாம்.

**கும்ப குருவின் ஆதிக்க காலம்!**

இதுவரை அஷ்டமத்துச்சனியின் ஆதிக்கம் இருந்ததை குரு பார்வை ஓரளவாவது நிவர்த்தி செய்தது. இப்போழுது எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி குருமாற்றம் ஏற்படுவதால் சனியின் ஆதிக்கம் வலுக்கிறது. எனவே, உத்தியோகம், தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. திடீர் விரயங்களும், எதிரிகளின் தாக்குதல்களும் அதிகரிக்கும். பயணங்களில் எச்சரிக்கை தேவை.

இம்மாதம் அஷ்டமத்துச்சனியின் ஆதிக்கம் வலுப்பதால், சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. எள் தீபம் ஏற்றினால், இனிய சம்பவங்கள் நடைபெறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடும் மாதமாக அமையப் போகிறது. அன்பு செலுத்துவதை அதிகம் செலுத்தினால், வம்பு, வழக்குகளிலிருந்து விடுபடலாம். உங்கள் பெயரில் வாங்கிய சொத்துக்கள் விற்பனையாகின்றதே என்று கவலைப்படுவீர்கள். ஒரு பிரச்சினை முடிந்தால் அடுத்த பிரச்சினையை நீங்கள் சந்திக்க நேரிடலாம். எனவே, கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சுய ஜாதகத்தின் பலமறிந்து பரிகாரம் செய்தால் நிலைமை சீராகும்.




(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி )

**தன்னுடைய துன்பங்களை மறைத்து இன்பங்களை மட்டுமே மற்றவர்களிடம் எடுத்துரைக்கும் மீன இராசி நேயர்களே!**

பொதுக்காரியங்களில் பணியாற்ற பெரிதும் விரும்புவீர்கள். பொல்லாதவர்களின் சகவாசம் தேவை இல்லை என்று நினைப்பீர்கள். உங்களிடம் கொடுத்த பொறுப்பை சிறப்பாக முடித்து நல்ல பெயர் எடுத்துக்கொள்வதால் தான் உங்களைச் சுற்றி ஒரு பெரும் கூட்டமே இருக்கிறது. கூர்மையான அறிவும், நேர்மையான குணமும் உங்களுக்கு இருப்பதால் கூட இருப்பவர்களுக்கு எல்லாம் வெற்றி கிடைக்கிறது.

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் குரு வக்ர கதியில் இருக்கிறார். குடும்ப ஸ்தானத்தில் கேது பலம் பெற்றுள்ளார். அஷ்டமத்தில் நான்கு கிரகங்கள் கூட்டாகச் சஞ்சரிக்கின்றன. எனவே, எதையும் யோசித்து செய்வதே நல்லது. அப்பொழுது தான் நேசித்தவர்களால் நிம்மதியும், நிலையான வருமானமும் கிடைக்கும்.பூஜிக்கும் தெய்வம் எது என்பதை சுய ஜாதக ரீதியாக அறிந்து கொண்டு வழிபாடு செய்து வந்தால், ஆசைகள் அனைத்தும் நிறைவேறும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் இல்லம் தேடி வந்து சேரும்.

**சிறப்பு தரும் செவ்வாய் பெயர்ச்சி!**

செவ்வாய் உங்கள் இராசிக்கு 2,9க்கு அதிபதியாவார்.இதுவரை எட்டாமிடத்தில் சஞ்சரித்து வந்த செவ்வாய் இனி எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக , கொடுக்கல்கள் வாங்கல்கள் ஒழுங்காகும். வருங்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். குடும்ப அமைதிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். கடுமையாக முயற்சி செய்தும் இதுவரை நடைபெறாத காரியங் கள் இப்பொழுது துரிதமாக நடை பெறும். தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர். வருமானம் திருப்தி தரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

4, 7க்கு அதிபதியான புதன் எதிர்வரும் 31ஆம்திகதி விருச்சிகராசியில் சஞ்சரிக்கப் போகிறார்.எனவே, பயணங்கள் அதிகரிக்கும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் மறையும்.எதிர்பாராத நபர் ஒருவரின் ஆலோசனையால் சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள். மாமன்,மைத்துனர் வழியில் நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்குக் கொடுத்து உதவி செய்வீர்கள். இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் என்ற எண்ணத்தைப் பூர்த்தி செய்ய ஒரு சிலர் பணம் கொடுத்து உதவ முன் வருவர். தாய் வழி உறுவினர்களால் சில தொல்லைகள் ஏற்பட்டு அகலும்.

**கும்ப குருவின் சஞ்சாரம்**

குரு உங்கள் இராசி நாதனாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குவதால் அதன் வக்ர காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சியாக இருக்கவேண்டும். அது போன்ற நேரம் தான் எதிர்வரும் நவம்பர் 7 இல் குடும்பத்தில் குரு சஞ்சரிக்கும் நேரம்.மீன இராசியில் சஞ்சரித்த குரு பின்னோக்கி வருகிறார். இதன் விளைவாக விரயங்கள் கூடும். உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புகள் ஏற்பட்டாலும், ஊர்மாற்றங்களால், அலைச்சல் உருவாகும். உறவினர்கள் பகை வராமல் பார்த்துக் கொள்வது நல்லது. நண்பர்களைநம்பிஏமாறாமல் கவனம் அதிகம் செலுத் தும் சூழ்நிலை உருவாகும்.

**சிவல்புரி சிங்காரம்**

வியாழன் விரதமும், தென்முகக் கடவுள் வழிபாடும் விருப்பங்களை நிறைவேற்றும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

உங்களுக்கு இம்மாதம் உடல்நிலையில் அதிக கவனம் செலுத்த வேண்டிய மாதமாக அமையப்போகிறது. வேலை பார்க்கும் பெண்கள் விருப்ப ஓய்வை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைப்பர். நினைத்தது நிறைவேறவும், நிம்மதியடையவும் சுய ஜாதக ரீதியாகப் பரிரிகாரங்களைத் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது . மற்றவர்களிடம் நம்பிக் கொடுத்த பொறுப்புகள் நிறைவேறுமா என்பது சந்தேகம் தான். மாதக் கடைசியில் உறவினர்களால் பகை உருவாகலாம். எதையும் சொல்வதற்கு முன் யோசித்துச் செய்வது நல்லது. வரவும் செலவும் சமமாகும். (முற்றும்)




யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், கல்லூரி அதிபர் திருமதி வே.பேரின்பநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்

## எதிர்க்கட்சித் தலைவர் ஐரோப்பாவிற்கு பயணம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று ஐரோப்பா பயணமாகியுள்ளார். இரண்டு வார விஜத்தை மேற்கொண்டு செல்லும் இவர் பல ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக் ஆகியோருடனும் பல விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுதவிர பிரிட்டிஷ் கொன்சவேட்டிவ் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் சிலரையும் சந்திக்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய விஜயத்தை நிறைவு செய்யதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் நோர்வே செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே விஜயத்தின் போது அவர் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் எரிக்சொல்ஹெய்மையும் சந்தித்து உரையாடவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## போதைப் பொருள் பாவனை முற்றாக தடுக்கப்படவேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டு மக்கள் சட்டம் மற்றும் ஒழுங்கை சிறந்த முறையில் பேணுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளர்.

நேற்று முன்தினம் வெலிகம நகரசபையில் இடம்பெற்ற தென்மாகாண அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ள போதைப்பொருள்பாவனையை முற்றாகத் தடுப்பதற்கு சகல தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தவிடயம்குறித்து பொலிஸாருக்கு சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை பொலிஸ் மா அதிபர் எடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். இது தவிர, மொழியாற்றல் உள்ள இளைஞர்களை தயார்ப்படுத்தும் திட்டம் சில வருடங்களில் ஆரம்பிக்கப் படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


# தமிழக அரசியல் கட்சிகள் தான் தமிழினத்தின் எதிரிகள்!

"இன்னிக்கு இருக்கிற ஆயிரம் ஆயிரம் வசதிகளை வச்சு விஞ்ஞானிகளை உருவாக்கலாம்... விசித்திர மனிதர்களைப் படைக்கலாம். ஆனால், சீமான் மாதிரி ஒரு உணர்வாளனை யாராலும் உருவாக்க முடியாது. அவரைக் கைது செய்து வைக்கிற அளவுக்கு அவர் கொலை செய்தாரா....கொள்ளை அடிச்சாரா....? எட்டு வருசத்திற்கு இந்தியாவையே நிர்வகிக்கிறதுக்கு தேவையான கோடிகளை சுவிஸ் வங்கியில் பதுக்கி வைச்சிருக்கிறாங்களே... அவங்களை உள்ளே தள்ளணுமா? இல்லை,சட்டைப் பையில் சல்லிப் பைசாகூடா இல்லாமல், ஒட்டு மொத்த தமிழினத்திற்காகவும் குரல் கொடுக்கிற சீமானை தள்ளனுமா" தொண்டை நரம்பு புடைக்க தங்கர்பச்சான் இப்படி பேசியது மும்பையில் உள்ள தாராபி ஏரியாவில், கடந்த 10ஆம் திகதி ஆயிரக்கணக்கான தமிழர்கள் மத்தியில் அனல் தெறிக்க தங்கர்பச்சான் பேசிய பேச்சு,அவர் தமிழகத்திற்கு வருவதற்குள்ளேயே இங்கே சூட்டைக் கிளப்பி விட்டது. சரி,தங்கர்பேச்சின் சொச்ச சூட்டையும் கேட்டுவிடுவோம். "நிலத்தையும் நிம்மதியையும் ஒரு சேர பறிகொடுத்து விட்டு உயிரை மட்டுமே கடைசிப்பொருளாகப் பத்திரப்படுத்திய படி ஈழத்தமிழினமே நாதியற்று அலைகிறது. உறவுகளுக்கு கைகொடுக்கவோ,ஒன்று பட்டு நிற்கவோ உரிமைகளை உணரத் தவறிய தமிழனால் முடியவில்லை.

தொன்மையையும்,துடிப்பையும் மறந்தவனாக அனைத்து அடையாளங்களையும் இழந்தவனாக தமிழன் மாறிவிட்டான். தனக்கென ஒரு சரியான தலைவனை தேர்ந்தெடுக்கக்கூட அவனுக்குத் தெரியவில்லை. நமக்கான எதிரி வெளியில் இல்லை. ஒவ்வொரு தமிழனின் உயிரையும் வாக்குகளாக்கி, நமக்குக்கிடைக்கவேண்டிய உரிமைகளை பெற்றுத்தராமல் ஏமாற்றி அலையும் நமது அரசியல் கட்சிகள் தான் தமிழனித்தின் எதிரிகள்.

தண்ணீர் பிரச்சினை தொடங்கி தலையில் இடி விழும் பிரச்சினை வரை தமிழன் நிர்க்கதியாக நிறுத்தப்பட்டு இருக்கிறான்.இனம் தான் முக்கியம் என நினைத்திருந்தால், அனைத்துக்கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராடி நமக்கான தேவைகளை தீர்க்க முடியும். இனமா?

தமிழனோட தலைகளை வாக்குகளாக்கி மத்திய அரசின் காலடியில் வைத்து அதிகாரம் பெற்றுக்கொண்டு பின் நம்மையே அழிக்கிற காரியத்தை ஒரு நிமிடம் மனதுக்குள் நினைத்துப் பார்த்தீர்களேயானால்... நம் எதிரிகள் யார் என்பது உங்களுக்குத் தெரியும்!




## சீமானை விடுவிக்க முதல்வரை சந்திப்போம்
## மும்பையில் பொங்கியெழுந்தார் தங்கர்

நீர்வளத்தை இழந்ததால், விவசாய ஜீவன்கள் பிச்சைக்காரர்களாகி நகரத்தை நோக்கி ஓடுகிறார்கள். வலை வீசினால்தான் வாழ்க்கை என பிழைப்பு நடத்தும் மீனவர்கள்,சிங்களவனின் துப்பாக்கிக்கு பலியாகி உயிரை விடுகிறார்கள்.ஒன்றரை இலட்சம் தமிழர்களை தரையில் நசுக்கிக் கொன்றது போதாது என இன்றைக்கும் முகாமுக்குள் அடைத்து வைத்து மீத வெறியையும் தீர்த்துக்கொள்கிறது வெறிபிடித்த சிங்கள அரசு.

இனத்தின் மீது விழும் இத்தனை துயரங்களை பத்துக்கோடி தமிழர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றால்... நாளைய வரலாறு காறித்துப்பாதா? நான்கு இலட்சம் மக்கள் தொகை கொண்டவர்கள் கூட தனி நாடாக அங்கீகரிக்கப்படுகிறபோது,இத்தனை கோடித்தமிழர்கள் இருந்து என்ன புண்ணியம்? போகிற இடத்தில் எல்லாம் உதை வாங்கத்தான் இந்த இனமா?

ஐயா அரசியல்வாதிகளே... தேர்தல் நேரத்தில் நீங்கள் எப்படி வேண்டுமானாலும் கூறுபட்டு நில்லுங்கள்... ஆனால் இனம், மொழி,மண் என தமிழனுக்குப் பிரச்சினை வருகிறபோது தயவுசெய்து ஒன்றாக நில்லுங்கள். இதற்காக உங்கள் கால்களில் விழவும் தயாராக இருக்கிறேன்.!

எது தேசியப் பாதுகாப்புச் சட்டம்? மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் பேசினால் பாய்வதுதான் தே.பா.ச-வா?" என தங்கரின் தடதடப்பு எகிறஎகிற... கூட்டமும் பொங்கியது. மாறித்துள்ளி இருக்கிறது.

"சீமான் மேல் தமிழக முதல்வர் கலைஞருக்கு தனிப்பட்ட விரோதம் ஏதும் கிடையாது. அவரைப் பார்த்தும் அவர் தமிழைப் பார்த்தும் வளர்ந்தவங்கதான் நானும் சீமானும். சீமானை கலைஞர் எந்த அளவுக்கு நேசிக்கிறார் என்று மத்தவங்களுக்குத் தெரியாது.

ஆனா அவரோட மனசை நல்லா அறிஞ்சு வைத்திருக்கிற எனக்குத் தெரியும். சீமானை விடுவிக்கச் சொல்லி நான் முதல்வரை நேரில் சந்திச்சு கோரிக்கை வைக்கப்போகிறேன்.

உலகத் தமிழர்கள் சீமானை எப்படிப் பார்க்கிறாங்கன்னு அவர்கிட்ட உரக்கச் சொல்லுவேன். அவரைவிட்டா நாங்க சொல்றதுக்கு வேற ஆள் இல்லையே...!என தங்கர் முடிக்க... கூட்டமே கலங்கியது.

### ஜீனியர் விகடன்

"செந்தமிழன் சீமானை வெளியில் எடுப்போம்... செந்தமிழ் ஆட்சியை வென்று எடுப்போம்!" என அங்கிருந்த இளைஞர்கள் ஆவேசமாகக் குரல் கொடுக்க.... தங்கரின் பேச்சு வழக்கமான பாணிக்கு

தங்கரின் பேச்சு முதல்வரின் மனதை அசைத்துப் பார்த்தால் சரிதான்!

இரா.சரவணன்

# மீண்டும் கூட்டணிக்குள்? கருணாநிதி-ராமதாஸ் சந்திப்பு



"கருணாநிதி நம்ப வைத்து கழுத்தை அறுத்துவிட்டார்!" என்றார் ராமதாஸ்...!

"ராமதாஸ் ஓர் அரசியல் வியாபாரி!"என்றார் துரைமுருகன்!


கருணாநிதியை ராமதாஸ் சந்தித்தபோது...

இப்படி கடந்த ஒரு வாரம் முன்பு இரு தரப்பும் சீறியது. பா.ம.க.வின் சட்டமன்ற கொறடா வேல்முருகனோ,"கருணாநிதி கட்சி நடத்துவதே மகன்,மகள்,பேரனுக்காகத்தான்?"என்று திராவக வார்த்தைகள் மூலமாகத்தான் தன் பங்குக்கு கட்சிப்பணி ஆற்றினார்.

ஊடலுக்குப் பின் கூடல் என்பதாக... இந்த உரசல்,விரிசல் கட்சிகளில் அடுத்த எபிஸோட், கைகுலுக்கலாக மாறியது, "அரசியல் அல்ல இதெல்லம் சகஜம் அப்பா"என்பது போல முதல்வர் கருணாநிதியை நேரில் வந்து சந்தித்த ராமதாஸ்.

"சாதிவாரி கணக்கெடுப்பை வலியுறுத்தவே இந்தச் சந்திப்பு" என்று வெளியில் காரணம் சொல்லப்பட்டாலும், இதற்குப்பின்னால் அரசியல் பக்டைக்காய்கள் உருள்வதாகவே பேசப்படுகிறது! முதுகில் கோட்டைக்காட்சிகள்...13ஆம் திகதி காலை 11மணிக்கு ராமதாசுக்கு கோட்டையில் அப்பொஜின்மெண்ட். அதன் படி, முதல்வரின் அறை வாசலில் முதல்வரின் செயலாளர் ராஜமாணிக்கம், அங்கிருந்து ராமதாஸை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார். சாதிவாரி கணக்கெடுப்பு, இடஒதுக்கீட்டு விவகாரம் பிற்படுத்தப்பட்டோர் துறையில் வருகிறது என்பதால்,அந்தத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரனும் அதிகாரிகளும் இருந்தனர்.ஆனால், சம்பந்தமே இல்லாமல் அமைச்சர் துரைமுருகனும் அங்கே இருந்ததை ராமதாஸ் எதிர்பார்க்கவில்லை.

"வணக்கம்...."சொன்னபடியே நேராக கருணாநிதியிடம் கை குலுக்கிய ராமதாஸ்,மஞ்சள் சால்வையை அவருக்குப் போர்த்தினார். எப்போதும் போல் ஃபேவரைட் புன்னகையுடன் இருந்த துரைமுருகன் பக்கம் ராமதாஸ் திரும்பிக்கூடப்பார்க்கவில்லை!

சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான மனுவை முதல்வரிடம் ராமதாஸ் கொடுக்க... "இட ஒதுக்கீட்டுக்கு எப்போதுமே பாதுகாவலராக இருப்பவர் கலைஞர் தான். உங்கள் கோரிக்கையை நிச்சயம் பரிசிலீப்பார்!" என்று ராமதாஸிடம் சொன்னார். அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ஆர்.அரசியலில் விவாதம் ஏதும் இல்லாமல் அரை மணி நேரத்தில் முடிந்தது அந்தக்கூட்டம்.

இந்தச் சந்திப்பு பற்றி கே.கே. எஸ். எஸ்.ஆரிடம் நிருபர்கள் கேட்டபோது ,

11ஆம் பக்கம் பார்க்க...

# ஜெர்மனியை பல்லின மக்களைக் கொண்ட நாடாக மாற்றும் முயற்சிகள் தோல்வி



ஜெர்மனி பல்லின மக்களைக் கொண்ட பல்வேறு கலாசாரங்களை கடைப் பிடிக்கும் நாடாக மாற்றப்பட வேண்டும் என தம்மால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதால் ஜெர்மனின் சான்சிலர் எங்கீலா மேக்கல் தெவித்தள்ளார்.

பொட்சம் பிரதேசத்தில் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். தமது திட்டத்திற்கு அமைய சகல கலாசாரங்களையும் கொண்ட மக்களும் அருகருகாமையில் மகிழ்ச்சியுடள் வாழ வேண்டும் என நினைத்தது நடைமுறை ப்படுத்த முடியாமல் போயுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சிகள் இந்தத் திட்டத்திற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன் வெளிநாட்டவர்கள் ஜெர்மனிக்கு வருவதனை இன ரீதியாக எதிர்ப்பதாகவும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் அண்மையில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு பெறுபேறுகளின் படி 30 சதவீதமான வெளிநாட்டவர்கள் ஜெர்மனியில் குடியேறி வருவதாக ஜெர்மனியர்கள் கருதுகின்றனர்.

ஜெர்மனிக்கு வந்துள்ளவர்களில் ஒரு கோடியே 60 இலட்சம் வெளிநாட்டவர்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தி தமது வாழ்க்கை வசதிகளை உயர்த்தும் நோக்கிலேயே ஜெர்மனிக்கு செல்வதாக எதிர்கட்சி அரசியல்வாதிகள் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக தாம் தமது திட்டத்தில் தோல்வியைக் கண்டுள்ளதாக ஜெர்மன் சான்சிலர் எங்கீலா மேக்கல் கவலை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## மெக்சிகோவில் விமான விபத்து; 8பேர் பலியானார்கள்

(வெர்ரக்ரஸ்)

மெக்சிக்கோவில் எண்ணெய் தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு சென்ற ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த ஆறு தொழிலாளர்கள் மற்றும் இரண்டு விமானிகள் உட்பட 8 பேர் பலியானார்கள்.

ஹெலிகொப்டர் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விபத்து நடந்ததாக அதிகாரிகள் கூறுகின்றனர். விபத்தில் பலியானார்கள் உடல் கருகிய நிலையில் மீட்கப்பட்டன. (ஸ்ரீ-2)

## பாகிஸ்தான் இடைத்தேர்தல் வன்முறையில் 14 பேர் பலி

(கராச்சி)

பாகிஸ்தானின் வர்த்தக தலைநகராக விளங்கும் கராச்சி அருகே உள்ள ஓரன்கி மற்றும் பால்டியா பகுதிகளில் மாகாண சட்ட சபைக்கான இடைதேர்தல் நடைபெற்றது.


இந்தத் தேர்தலில் உருது பேசும் மக்களின் ஆதரவுபெற்ற முட்ஹைதா இகுவாமி கட்சியும் அவாமி தேசிய கட்சியும் போட்டியிட்டன.

போட்டியின் போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை அரசு செய்து தரவில்லை என கூறி வெளிநடப்பு செய்வதாக தெரிவித்தது. இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 14 பேர் கொல்லப்பட்டதுடன் 40 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (ஸ்ரீ-2)

## சீனாவில் இடம்பெற்ற சுரங்க வெடிவிபத்தில் 20 பேர் பலி

சீனாவில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 20 பேர் கொல்லப்ப்ட்டனர். 17 பேர் சுரங்கத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர். சீனாவில் மத்திய மாகாணமான ஹெனானில் யுஜோவு நகரத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் நேற்று முன்தினம் அதிகாலை வெடிவிபத்து ஏற்பட்டது.

குறித்த விபத்தில் உள்ளே பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களில் 20 பேர் இறந்தனர். மீட்புக் குழுவினரால் இறந்தவர்களின் உடல்கள் வெளியில் கொண்டுவரப்பட்டதாக தெரியவருகிறது. (ஸ்ரீ-2)




## நம்பகமான உளவுத் தகவல்களை இந்தியாவுக்கு தெரிவித்தோம்

### அமெரிக்கா தெரிவிப்பு

இந்தியாவின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான நம்பகமான தகவல்களை இந்தியாவுடன் பகிர்ந்து கொண்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மும்பை பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்புடைய டேவிட் ஹெட்லிக்கு பாகிஸ்தானிலிருந்து இயங்கும் பயங்கரவாத குழுக்களுடன் தொடர்பிருப்பது அமெரிக்க புலனாய்வு அமைப்புக்கு முன்பே தெரியும் என வோஷிங்டன் போஸ்ட் இதழில் அண்மையில் செய்தி வெளியானது.

இந்நிலையில் இந்தச் செய்தி தொடர்பாக அறிக்கை வெளியிடப்பட்டிருக்கும் இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் திமோதி உரோமர் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பான நம்பகமான தகவல்களை இந்தியாவுடன் பகிர்ந்து கொண்டோம்.

டேவிட் ஹெட்லி தொடர்பாக தற்போது வெளியாகியிருக்கும் தகவல் பற்றி இப்போது கருத்துத் தெரிவிக்க முடியாது.

அந்தச் செய்தி என்ன சொல்ல வருகிறது என்பதை உறுதியாகத் தெரிந்து கொண்ட பிறகு எதையும் கூற முடியும் என்று தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியாவுடனான ஒத்துழைப்பு ஆக்கபூர்வமானது என்றும் உரோமர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். (ஸ்ரீ-2)

## ஆப்கானிஸ்தான் இராணுவ வீரருக்கு அமெ.இராணுவ நீதிமன்றில் விசாரணை

ஆப்கானிஸ்தானில் பொதுமக்களை படுகொலைசெய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ படை வீரர் ஒருவருக்கு எதிராக இராணுவ நீதிமன்றில் விசாரணைகள் நடத்தப்பட உள்ளதாக அமெரிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மூன்று ஆப்கான் பொது மக்களை வேண்டுமென்றே 5 அமெரிக்கப் படைவீரர்கள் படுகொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தப்படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஜெர்மி மார்லொக் என்ற இராணுவப் படைவீரருக்கு எதிராக விரைவில் இராணுவ நீதிமன்றில் வழக்கு தொடரப்படவுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை மூடி மறைப்பதற்கு முயற்சி மேற்கொண்டதாக மேலும் ஏழு அமெரிக்கப் படைவீரர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் உச்சப்பட்சமாக இராணுவ நீதிமன்றில் ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம். எனவும் அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யமுடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் கந்தஹார் பிரதேசத்தில் குறித்த படைவீரர்கள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைக்குண்டு வீசி எறிந்தும் துப்பாக்கிப் பிர யோகம் மேற்கொண்டும் பொதுமக்கள் மீது குறி த்த இராணுவ உத்தியோகத்தர்கள் தாக்குதல் நடத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

## இனி குடும்பத்துக்கு ஒரு வீடு தான்; சீனாவில் புதுமையான கட்டுப்பாடு

(ஷாங்காய்)


வீடு உள்ளிட்ட அசையா சொத்துக்களின் விலை ரொக்கெட் வேகத்தில் அதிகரித்து வருவதை தடுக்க சீன அரசு அதிரடியான உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. ஷாங்காய் நகரில் எதிர்வரும் காலங்களில் குடும்பத்துக்கு ஒரு வீடு என்ற நடைமுறை பின்பற்றப்படும் என அறிவித்துள்ளது. சீனாவில் உள்ள மிகப் பெரிய நகரங்களில் ஷாங்காயும் ஒன்று வர்த்தக நகரமான ஷாங்காயில் நாளுக்கு நாள் மக்கள் தொகை வேகமாக அதிகரித்து வருகிறது.

புதிதாக கட்டடம் கட்டுவதற்கு வெற்று இடங்களே இல்லை என்ற அளவுக்கு ஷாங்காய் நிலப்பரப்பு முழுவதும் கொங்கிரீட் மயமாகி விட்டது. மக்கள் தொகை அதிகரித்து விட்டதால் வீடுகள் , அடுக்கு மாடி குடியிருப்புகளில் முதலீடு செய்வதில் பலரும் ஆர்வத்துடன் உள்ளனர். குறைந்த விலைக்கு வீடுகளை வாங்கி சில ஆண்டுகள் செல்ல அதைப் பெரிய தொகைக்கு விற்பதால் நல்ல இலாபம் கிடைக்கிறது. இதனால் பலரும் போட்டி போட்டுக் கொண்டு வீடுகள் அடுக்கு மாடி குடியிருப்புகளை வாங்கி குவித்து வருகின்றனர்.

ஒரு குடும்பத்தினருக்கு பல வீடுகள் இருக்கின்றன. இதனால் இவற்றின் விலை ரொக்கெட் வேகத்தில் அதிகரித்து விட்டது. மற்ற முதலீடுகளை விட இது அதிக இலாபம் தரும் முதலீடாக உள்ளது. மேலும் பலர் எதிர்கால பயன்பாடு கருதி ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகளை வாங்கி அவற்றை பயன்படுத்தாமலே வைத்துள்ளனர்.

இதனால் சீன அரசு கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது. இதுபோன்ற பிரச்சினைகளால் அரசியலில் நிலையற்ற தன்மை ஏற்படுவதுடன் நாட்டின் நிதி பிரச்சினையும் சிக்கலாகும் என சீன அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து ஷாங்காய் மாநகராட்சி நிர்வாகம் அதிரடியாக ஒரு உத்தரவை பிறப்பித்துள்ளது. இதன்படி ஷாங்காய் நகரில் இனி ஒரு குடும்பத்தினர் ஒரு வீடு மட்டுமே வாங்க முடியும். புதிதாக மட்டுமல்ல பழைய வீடுகளை கூட இரண்டாவதாக வாங்க முடியாது. மேலும் புதிய கட்டடங்கள் வாங்கும் போது செலுத்த வேண்டிய வரியையும் விற்கும் போது செலுத்த வேண்டிய வரியையும் அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சீனாவின் அனைத்து நகரங்களிலும் இத்திட்டத்தை படிப்படியாக அமுல்படுத்தவும் சீன அரசு திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ-2)



ஜப்பான் மக்களின் கலாசாரத்தோடு கலந்தது "சுமோ" மல்யுத்த போட்டி. அங்கு சிறு குழந்தைகள் சுமோ போட்டி நடக்கும் மைதானத்தில் முதுகில் மண் ஒட்ட விளையாடினால் ஆயுளுக்கும் நன்றாக இருக்கும் என்று ஒரு நம்பிக்கை உண்டு. அதற்காக இங்கு இரு குழந்தைகளை சுமோ பயில்வான்கள் உடையில்லாமல் மண்ணில் புரளவிடுகின்றனர்.








வல்வை சிவகுரு வித்தியாலய மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.இதில் மாணவிகளின் அணிநடை நிகழ்வையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் வெற்றியீட்டிய மாணவனுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் வெற்றியீட்டிய மாணவர்களுடன் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் (இடது) வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் (வலது) ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்-அல்வாய் செய்தியாளர்)

# பொலிஸ்மா அதிபருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

பொலிஸ் மா அதிபர் பாலசூரியவுக்கு கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் மற்றும் முக்கிய பிரபுகளை விடவும் கூடுதலான பாதுகாப்பு ஒழுங்குகள் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் வரலாற்றில் இவ்வாறு அதிகளவு பாதுகாப்பு வேறு எந்தவொரு பொலிஸ் மா அதிபருக்கும் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகமாக இடம்பெற்ற காலத்தில் கூட பொலிஸ்மா அதிபர்களுக்கு இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை எனவும் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 180 உத்தியோகத்தர்கள் தற்போதைய பொலிஸ்மா அதிபரின் பாதுகாப்பிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் 19 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு குண்டு துளைக்காத வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

சாதாரண அமைச்சருக்கு ஆறு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வழங்கப்படுவதுடன் சிரேஷ்ட அமைச்சர்களுக்கு 50 க்கும் குறைவான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# புத்தூர் மீன்சந்தை புனரமைப்பு

(பருத்தித்துறை)

புத்தூர் மீன் சந்தை புனரமைப்புச் செய்வதற்குரிய ஒழுங்குகளை வலிகிழக்கு பிரதேச சபை செயலாளர் ரி.நடராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

நீண்டகாலமாக இச் சந்தையானது புனரமைக்கப்படாமல் இருந்து வந்துள்ளது.

இச் சந்தைக்கருகிலுள்ள கிணறும் துப்புரவு செய்யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2-10)

# கனேடிய குடிவரவு அமைச்சர் ஓரங்கட்டப்படுகின்றார்?

(கொழும்பு)

கனடாவின் குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி இலங்கை இனப் பிரச்சனை விவகாரத்தை கையாண்ட விதத்தால் கனேடிய அரசாங்கத்தினால் ஓரங்கட்டப்படுகிறார் என்ற செய்திகள் படிப்படியாக வெளிவரத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக 492 பேருடன் சன் சீ கப்பல் வருகை தந்ததையடுத்து அவர் அப் பிரச்சனை தொடர்பான விடயங்களை கனடாவில் கவனிக்காமல் பிலிப்பைன்ஸ், சீனா, இந்தியா, அவுஸ்திரேலியா என்கிற நாடுகளுக்குச் சென்று வந்ததோடு அங்கிருந்து கனடா திரும்பும் போது அவுஸ்திரேலியாவில் கடைப்பிடிக்கும் சட்டத்தை கனடாவில் அமுல் படுத்த முயன்ற போதும் கனேடியப் பிரதமரால் அது தடுத்து நிறுத்தப்பட்டது.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலேயே உரையாற்றிய குடிவரவு அமைச்சர் பிரதமரின் கருத்தை நிராகரிப்பது போல எதை நடைமுறைப்படுத்துவது என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லையென்று கருத்து தெரிவித்தார்.

ஆனாலும் இந்த அமைச்சர் டில்லியில் நிற்கும் போது தெரிவித்த கருத்து இப்போது பலத்த சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

இலங்கைத்தமிழர்கள் கனேடியக் குடியுரிமை பெற்றதும் இலங்கை சென்று வருகிறார்கள். இது அவர்கள் அகதிகோரிக்கை கோரும் போது தெரிவித்த கருத்துக்களிற்கு மாறாக அவர்கள் தாராளமாக இலங்கைக்குச் சென்று வருவது கேள்விக்குரிய விடயம் என்றும் இது பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் கனடாவிற்கு குடிபேர்ந்த எந்த ஒருவரும் இவ்வாறு கனேடியக்குடியுரிமை கிடைத்த பின்னர் தமது தாய் நாட்டிற்குச் சென்று வருவது வழமையே. குறிப்பாக சீக்கிய இனத்தவர்கள் இந்தியாவில் தமக்கு தீங்கு இழைக்கப்படுகிறது என்று அகதிக்கோரிக்கையில் வந்தாலும் அவர்களும் இவ்வாறு குடியுரிமை பெற்றவுடன் இந்தியாவிற்கு சென்று வருகிறார்கள்.

அத்தோடு இலங்கையிலிருந்து வந்து அகதி கோரிய சிங்களவர்களும் இவ்வாறு தமிழர்களை விட அதிகளவு முறை இலங்கைக்கு பயணம் செய்து வருகிறார்கள்.

கனடாவில் கணிசமான அளவு சிங்களவர்களும் போரை வைத்து அகதி கோரியிருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் மேற்படி அமைச்சர் சிங்களவர்களும் குடியுரிமை பெற்று இலங்கை சென்று வருவதைத் தவிர்த்து இலங்கைத் தமிழர்களை குறிவைத்து இவ்வாறான கருத்தைத் தெரிவித்ததையிட்டே விசனமான கருத்துக்கள் தற்போது எழுந்துள்ளன.

இந் நிலையில் இப்போது குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர்கள் குறித்த கருத்துகள் அவற்றிற்கே ஆபத்தாக அமையும் என்றே தற்போது மிகவும் நம்பகமாகத் தெரியவருகிறது.

(ஸ்ரீ-2)

# மீண்டும் கூட்டணிக்குள்....

9ஆம் பக்கம் தொடர்ச்சி...

"கூட்டணி உருவாகிவிட்டது!" என்று சொல்ல நினைத்தவர் போல ....சிரித்துக்கொண்டே கூட்டுறவுச் சின்னம் போல தன் இரு கைகளையும் கைகோர்த்துக் காட்டினார்.

இந்தச் சந்திப்புக்கு என்ன பின்னணி என்று தி.மு.க.-பா.ம.க. இரண்டு தரப்பிலும் பேசிய போது கிடைத்த தகவல்கள் இவை.

"ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் கொழுத்திப்போடு அதிரடிகளால்... காங்கிரஸ்-தி.மு.க.கூட்டணிக்குள் ஏகப்பட்ட உரசல்கள்! இன்னொரு பக்கம்,காங்கிரசுக்கு ஜெயலலிதா வலைவீச.... அவர்கள் கைநழுவிப் போகக்கூடாது என்கிற யோசனை அறிவாலயத்தை ஆட்டி வைத்தது. 'என்ன தான் இணக்கத்தைக் கடைப்பிடித்தாலும்,ஒருவேளை காங்கிரசோடு கூட்டணி தொடராமல் போனால்...?' என்று யோசிக்க தி.மு.க.,காலத்தை தன் கவனத்தை பா.ம.க- வின் மீது திருப்ப நினைத்திருக்கிறார்.

அதனால்தான் , சாதிவாரிக்கணக்கெடுப்பை சாக்காக வைத்து ராமதாசுக்கு அப்பொயின்மென்ட் கொடுத்து இருக்கின்றனர் " என்று சொன்ன சில அரசியல் புள்ளிகள்,பழைய நடப்பு ஒன்றையும் நம்மிடம் சுட்டிக்காட்டினர். "கடந்த சட்ட சபைத் தேர்தலில் கூட்டணியில் இருந்த பா.ம.க. அதன் பின்னர் பிரிந்து விட்டது. பின்னர் கடந்த 2009 எம்.பி. தேர்தலில் அந்தக் கட்சியை கூட்டணியில் சேர்க்க தி.மு.க. முயற்சி எடுத்தது. இப்போது போலவேதான் அப்போது கோட்டையில் கருணா நிதியை சந்தித்தார் ராமதாஸ். "பூரண மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டும்" என்ற கோரிக்கையோடு அந்த சந்திப்பு நடந்தது.உடனே, டாஸ்மாக் கடைகளின் நேரத்தைக் குறைத்து அறிவிப்பு வெளியிட்டார் கருணாநிதி. இதெல்லாம் கருத்து வேறுபாடுகளை தொண்டர்கள் மத்தியில் மறக்கடித்து இணக்கமான கூட்டணியாகத் தொடரவே நடந்தன.

ஆனால் அப்போது அது சரிவரவில்லை. பா.ம.க-வோ அ.தி.மு.க. கூட்டணிக்குத் தாவி, தேர்தலில் படுதோல்வி அடைந்தது. இப்போது சாதிவாரிக் கணக்கெடுப்புக்கு ஆதரவு கொடுத்து அதன் மூலம் பா.ம.க-வை தக்க வைக்கும் வேலையைத் தொடங்கியிருக்கிறது தி.மு.க... என்கிறார்கள்.

அ.தி.மு.க- வை பொறுத்த வரையில் முதலில் காங்கிரஸ்.... அடுத்து தே.மு.தி.க... கடைசியாக பா.ம.க... என்று கூட்டணியில் சேர்ப்பதற்கு சொய்ஸ் வைத்துள்ளாராம் ஜெயலலிதா. மூன்றாவது சொய்ஸாக உள்ளே போனால் கிடைக்கிற மரியாதையைவிட தி.மு.க.பக்கமே இருந்துவிடலாம் என்று கணக்குப் போடுகிறது பாட்டாளி மக்கள் கட்சி என்கிறார்கள்.

சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான சந்திப்பு முடிந்த பின்னர் மீண்டும் கூட்டணி ஏற்படுமா? என்று பத்திரிகையாளர்கள் ராமதாஸிடம் கேட்க... அரசியலில் எது வேண்டுமானாலும் நடக்கலாம்... என்றார். அதுவும் அவர் விடயத்தில் சொல்லவும் வேண்டுமா என்ன?

**ஜூனியர் விகடன்**

# இந்திய வெளிவிவகார அமைச்சர் நவம்பரில் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்த விஜயம் தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா இலங்கைக்கு விஜயம் செய்வார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை இந்திய கூட்டுப் பேரவையின் அமர்வுகளிலும் இவர் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று தசாப்த காலமாக யுத்தம் இடம்பெற்ற வலயங்களையும் எஸ்.எம்.கிருஷ்ணா பார்வையிட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# மட்டக்களப்பில் முன்னாள் புலி உறுப்பினர்களின் விபரங்கள் திரட்டப்படுவதாக முறைப்பாடு

## அச்சமான சூழல் உருவாகும் என்கிறார் அரியநேத்திரன் எம்.பி

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்கத்திலிருந்து விலகிச் சென்றவர்கள், படையினரிடம் சரணடைந்து பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள்,மாவீரர்களின் உறவினர்கள் தொடர்பான தகவல்களைப் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் திரட்டி வருவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ப.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராம சேவகர்கள் ஊடாக இந்த விபரங்கள் திரட்டப்படுவதாகவும் அதன் பின்னர் பொலிஸா ரும் படையினரும் குறிப்பிட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்வதாக தம்மிடம் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் அமைதியும் சமாதானமும் நிலவுவதாக அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கும் இந்நிலையில் இவ்வாறான தேவையற்ற நடவடிக்கைகள் மூலம் தமிழ்மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியாது.அத்துடன் இந்த மாவட்டத்தில் அச்சமான சூழ்நிலையே உருவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பட்டிப்பளைச் சம்பவம் தொடர்பிலும் அவர் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

சட்டத்தைப் பேணி பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய பொலிஸாரே சிவிலியன்களை சுட்டுக்கொல்வதென்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பட்டிப்பளை முனைக்காடு பிரதேசத்தில் கடந்த 15ஆம் திகதி இளைஞர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவம் தொடர்பிலேயே தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

குற்றம் செய்தோரை கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதே பொலிஸாரின் கடமை. அதனை விடுத்து சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு அவர்கள் செயற்பட முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நியாயமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென தான் ஜனாதிபதியை கேட்டுள்ளதாகவும் கூறினார். (ஸ்ரீ-2)

# பொலிஸார் ஐவர் பிணையில் விடுதலை

(கொழும்பு)

பேருவளையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவமொன்றில் 7 வயது சிறுவனொருவன் கொல்லப்பட்டமை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டி ருந்த மஹரகம பொலிஸார் ஐவரை களுத்துறை மேலதிக நீதவான் நாமல் பெரேரா பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.

மேற்படி 5 சந்தேக நபர்களும் 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 3 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் பேருவளை பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையில் அகதி அந்தஸ்து கோரும் வெளிநாட்டவர்கள்

(கொழும்பு)

தமது நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளை காரணங் காட்டி வெளிநாடுகளில் அகதி அந்தஸ்தை கோருபவர்களின் பலர் தற்போது இலங்கைக்கு வருகை தருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலர் ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானிகரத்துடன் தம்மைப் பதிவுசெய்ததன் பின்னர் இலங்கையில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள். உயர்ஸ்தானிகரத்திடம் தாம் அகதிகளாகவே இங்கு தங்குவதாக உறுதியளித்துள்ள போதிலும் அவர்கள் பல வித மான பணிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலனவர்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து இங்கு வந்து உணவகங்களில் சமையல் காரர்களாகவும், சிற்றூழியர்களாகவும் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியானவர்களில் 146 பேர் பாகிஸ்தானில் இருந்து வருபவர்களுடன் சேர்த்து 210பேர் அகதி அந்தஸ்து கோருபவர்களும் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான இலங்கைக்கான பிரதிநிதி ஜெனீபர் பெர்கோனிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தற்போது தூதுவரகத்துடன் 214 பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அகதி அந்தஸ்ததைக் கோருபவர்கள் பெரும்பாலும் பாகிஸ்தான், ஈரான், ஈராக், மாலைதீவு மற்றும் மியன்மார் போன்ற நாடுகளைச் சார்ந்தவர்களே என அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, சர்வதேச சட்டங்களுக்கு அமைய 85 நாடுகளைச் சோந்தவர்கள் இலங்கையை அடைந்ததன் பின்னர் இங்கு இருப்பதற்கான உரித்தைக் கொண்டுள்ளதாகவும் சர்வதேச அகதிகளுக்கான அமைப்புகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# ஈரானில் இனிப்பு பட்சணங்களை திருடிய நபருக்கு கை துண்டிப்பு

(கொழும்பு)

இனிப்பு பட்சணங்களை திருடினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஈரானியர் ஒருவருக்கு பாரிய தண்டனையை ஈரான் நீதிமன்றம் விதித்துள்ளது.

இவர் திருடியது நிரூபணமான நிலையில் இவரது கை துண்டிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஒரு வருட காலத்திற்கு சிறைத் தண்டனையும் வழங்க அந்நாட்டு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் திருட்டுக் குறித்து, ஈரானிய பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

பொலிஸாரினால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், குற்றமிழைத்தவரின் கார் கடந்த மே மாதம் சோதனையிடப்பட்ட போது பல இனிப்புப் பட்சணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஈரானிய நீதிபதியின் உத்தரவிற்கிணங்க தற்போது அவரது கை துண்டிக்கப்பட்ட நிலையில், ஈரானிய வட கிழக்கு நகரான மஷாட்டில் உள்ள சிறைக்கூடத்தில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# ஒன் எரைவல் விசாக்களை துஷ்பிரயோகம் செய்து வருவதாக குற்றச்சாட்டுக்கள்

சில நாட்டுப் பிரஜைகள் ஒன் எரைவல் விசாக்களை துஷ்பிரயோகம் செய்து வருவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

இலங்கை, குறிப்பிட்ட சில நாடுகளினது பிரஜைகளுக்கு ஒன் எரைவல் விசா வசதிகளை வழங்கியுள்ளது.

எனினும் இந்த வசதிகளை சிலர் துஷ்பிரயோகம் செய்து வருவதாகவும் இதனால் உள்நாட்டு தொழிற் சந்தையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் இலகுவான முறையில் சிலர் இலங்கையில் தஞ்சமடைந்து தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொண்டுள்ளதாக அண்மைய ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது. அதிகளவில் ஒன் எரைவல் விசாக்களை துஷ்பிரயோகம் செய்யும் நாட்டு பிரஜைகளாக இந்திய மற்றும் பாகிஸ்தான் பிரஜைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுமார் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மற்றும் பாகிஸ்தான் ஒன் எரைவல் விசாக்களை பயன்படுத்தி இலங்கையில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருப்போர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருப்போரைக கண்டுபிடிப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்ற விபரங்களை ஊடகங்களுக்கு வெளியிட முடியாதென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தகவல்களை வெளியிடுவதன் மூலம் சட்டவிரோத குடியேறிகளை கண்டுபிடிப்பதில் சிக்கல் நிலைமை உருவாகலாம் என அவர் தெரிவித்துள்ளார். 85 நாடுகளுக்கு ஒன் எரைவல் விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒன் எரைவல் விசாக்களின் மூலம் இலங்கைக்கு செல்லும் சிலர் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தில் தங்களைப் பதிவுசெய்து கொண்டு பின்னர் வேலை வாய்ப்புத் தேடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

210 வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் புகலிடம் கோரியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் அறிவித்துள்ளது. இதில் 146 பேர் பாகிஸ்தானியர்கள் எனவும் ஏற்கனவே 205 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான், ஈராக், ஈரான், மாலைதீவு மற்றும் மியான்மார் போன்ற நாட்டுப் பிரஜைகள் இலங்கையில் புகலிடம் கோரியுள்ளனர்.

எவ்வாறெனினும் கடந்த 1951 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 4 ஆயிரம் பேர் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் 4 ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்களது குடும்பங்களுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 6 ஆயிரம் பேர் வரையிலானோர் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருவதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த 15 ஆம் திகதி 500 முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் வவுனியா கலாசார நிலையத்தில் வைத்து அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஸ்ரீ)

# அரசியலில் இருந்து ஓய்வுபெறும் திட்டமில்லை-சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலிலிருந்து ஓய்வு பெறும் திட்டம் கிடையாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன் அரசியலிலிருந்து ஓய்வு பெறப் போவதாக ஊடகங்களில் வெளியான செய்திகளில் உண்மையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உடல் நலக்குறைவினாலேயே இவர் அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போவதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதேவேளை அண்மைக்காலமாக நடைபெற்ற பாராளுமன்ற அமர்வுகளில் சம்பந்தன் பங்கேற்கவில்லை எனவும் உடல்நலக் குறைவினால் இந்தியாவில் சிகிச்சை பெற்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சித் தலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் உத்தேசம் கிடையாதென சிரேஷ்ட உறுப்பினர் மாவை.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையில் மாற்றம் ஏற்படுத்தப் போவதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# 08 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

8-ஆம் திகதியில் பிறந்தவர்கள் பெரும்பாலும் தொழில் அமைப்பில் மிக உயர்ந்த நிலை, சாதாரண நிலை என்று இரண்டு விதமான சூழ்நிலைகளிலும் காணப்படுவார்கள். இவர்கள் பெரும்பாலும் கனரக இயந்திரம், தொழிற்சாலை போன்ற மிகப் பெரிய தொழில்களிலும்; நீதி, நிதி சம்பந்தப்பட்ட துறைகளிலும் இருப்பார்கள். இவர்களில் பெரும்பாலோர் மனதால் துயரப் படும்நிலையை உடையவர்களாக இருப்பதைக் காணலாம். 8-ஆம் எண்ணிற்குப் பகை எண்களால் அதிகமான பாதிப்புகளைப் பெறும் நிலையும்; நட்பு எண்களால் மிக அதிகமான நன்மைகளைப் பெறும் நிலையும் இருக்கும். 8-ஆம் திகதியில் பிறந்தவர்களுக்கான தொழில் எண் 9; தொழிலுக்கு உதவி செய்யும் எண்கள் 3 மற்றும் 5. இந்த எண்ணிற்கே உரிய உயரிய எண்ணங்களும், நன்மையும் கடைசி வரை இவர்களுடன் இருப்பது 8-ஆம் எண்ணின் தனிச்சிறப்பு. பலரும் இந்த எண்ணை நினைத்து பயப்படுவதை மிக அதிகமாகக் காண முடிகிறது. அந்த அளவிற்கு 8-ஆம் எண் மோசமான எண் அல்ல.

8-ஆம் திகதி பிறந்த அரசு ஊழியர்கள் பெரும்பாலும் விவசாயம், அகழ்வாராய்ச்சி, சுரங்கம், தீர்வு சொல்லக்கூடிய துறைகள், வானியல் சம்பந்தப்பட்ட துறைகளில் இருப்பார்கள். திடீரென்று செயல்படும் தன்மை இருக்கும். அல்லது ஒன்றுமே செய்யாமல் அமைதியாக இருக்கும் நிலையும் இருக்கும். இதனால் தன் மேலதிகாரிகளால் பிரச்சினையைச் சந்திப் பார்கள். மேலதிகாரியாக இருப்பவர்கள் தங்களைவிட சிறிய பதவியில் இருப்ப வராலும் சில சங்கடங்களை அனுபவிக்கும் நிலையும் இருக்கும். தொழில் நட்பு எண்ணான 3-ஆம் எண்ணின் ஆதிக்கம் உள்ளவர்கள் பேச்சால் இலாபம் அல்லது நஷ்டம் என்ற இரண்டில் ஒன்றைப் பெறும் நிலை அல்லது இரண்டையும் மாறி மாறிப் பெறும் நிலை இருக்கும். திடீர் இடமாற்றம், பதவி இறக்கம், வேலை இழக்கும் நிலையும் இருக்கும். 5-ஆம் எண் ஆதிக்கம் பெற்ற அரசு ஊழியர்கள் வருவது வரட்டும் என்று அமைதியாக இருந்து விடுவார்கள். இவர்கள் போடும் கணக்கு சரியாகவே இருக்கும் என்று இவர்களே நினைத்து பிரச்சினைக்கு வழி வகுத்துக் கொள்வதும் உண்டு. 8-ஆம் திகதியில் பிறந்தவர்கள் மனம், அறிவு, செயல் இவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டால் என்றும் வெற்றி பெற்று பதவி உயர்வு, புகழ், வசதி என்று உயர்வான நிலைக்குச் சென்று விடுவார்கள். கொடுப் பதில் 8-ஆம் எண்ணுக்கு இணை எந்த எண்ணும் கிடையாது. 8-ஆம் எண்ணின் அதிர்வலைகள் மிகவும் துரிதமாகச் செயல்படக் கூடியதாகையால், நன்மை யானாலும் சரி; தீமையானாலும் சரி - விரைவாகவே நடக்கும். சரியான பாதை யைத் தேர்ந்தெடுத்து வாழ்வில் வளம் பல பெற, சனிக்கிழமை தோறும் சிவனுக்கு வில்வ இலைகளால் அர்ச்சனை செய்ய வேண்டும்.

8-ஆம் திகதியில் பிறந்து தொழில் செய்வோர் தான் "பிரபல தொழிலதிபர் அவர்களே' என்று சொல்லும் அளவிற்கு மிக உயர்ந்த நிலையில் இருப்பார்கள். பெரும்பாலும் போக்குவரத்து மற்றும் வாகனம் சம்பந்தப்பட்ட துறைகளிலும் இயந்திரங்கள் உற்பத்தி போன்ற துறை களிலும்மிக அதிகமாக இருப்பதைக்காணலாம். இவர்கள் தனாதிபதியின் அருள் பெற்றவராக இருப்தால் எண் ஆதிக்கம் அதிகமாகக் கிடைக்கப் பெற்று மிக உன்னதமான பொருளாதார நிலையை அடைகின்றனர். தொழில் எண் 9 மற்றும் உதவி செய்யும் 3, 5 ஆகிய எண்களின் பலத்தால்தான் இந்த நிலையை இவர்கள் அடைகிறார்கள். இதில் 9 மற்றும் 3-ஆம் எண்ணின் ஆதிக்கம் அல்லது 9 மற்றும் 5-ஆம் எண்ணின் ஆதிக்கம் அல்லது 3 மற்றும் 5-ஆம் எண்ணின் ஆதிக்கம்-இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பெற்றவர்கள் இரண்டாம் நிலை தொழிலதிபர்களாக இருப்பார்கள். பிறந்த திகதி எண்ணான 8-ன் ஆதிக்கத்தைப் பொறுத்தே உயர்வு-தாழ்வு அமைகிறது. எப்படியும் உயர்ந்துவிட வேண்டும் என்ற எண்ணமும் விடாமுயற்சியும் செய்யும் எண்ணம் 8-ஆம் எண்ணால் மீண்டும் மீண்டும் கிடைப்பதால் முடிவில் பெரும் வெற்றி அடையும் நிலை உண்டாகிறது. சரியான நேரத்தில் - சரியான பாதையில் செல்லாமல் மாறிச் செயல்படும்போது தான் சரிவைச் சந்திக்கிறார்கள். 8-ஆம் எண் செய்வதையே திரும்பத் திரும்பச் செய்வதால் தான் நன்மைகள் செய்தால் தொடர்ந்து நன்மையும், தவறு செய்தால் தொடர்ந்து தவறுகளும் செய்யும் நிலை உண்டாகி மேன்மை அல்லது வீழ்ச்சியை அடை கிறோம். ( இதனால்தான் 8-ஆம் திகதி திருமணம் செய்யக் கூடாது என்று கூறப் பட்டுள்ளது ), 8-ஆம் எண்ணின் ஆதிக்கம் பெற சனிக்கிழமை தோறும் சனீஸ்வரனுக்கு எள் விளக்கேற்றி வழிபட்டு, ஊனமுற் றோருக்கு உணவளித்து வந்தால் நன்மைகள் பல பெறலாம்.

8-ஆம் திகதி பிறந்து தொழில் செய்வோர் பெரும்பாலும் இயந்திரம் மற்றும் வாகனப் பழுது பார்க்கும் தொழில், மின்சாரம் சார்ந்த வேலைகள், பூமியைத் தோண்டுதல் போன்ற வேலைகளில் அதிகம் காணப்படுவார்கள். 8-ஆம் எண் ஆதிக்கம் மற்றும் தொழில் எண்ணான 9-ஆம் எண்ணின் ஆதிக்கக் குறைபாடு காரணமாகத்தான் மிகச் சிறந்த அறிவாற்றல் இருந்தும் இவர்கள் சாதாரண நிலையை விட்டு முன்னேற முடியாமல் இருக்கிறார்கள். தொழில் நட்பு எண் 3 மற்றும் 5-ன் ஆதிக்கம் மட்டும் துணை புரிவதால், ஜீவன சம்பந்தப்பட்ட குறைவின்றி இருக்கிறார்கள். இவர்களில் சிலருக்கு 44 வயதுக்குமேல் 8-ஆம் எண் அல்லது 9-ஆம் எண்ணின் ஆதிக்கம் கிடைக்கப் பெற்று, சிறிது சிறிதாக முன்னேறி சுயமாகத் தொழில் செய்யும் நிலையை அடைவார்கள். சிலர் திடீர் நன்மைகள் கிடைக்கப் பெற்று பெரும் தொழில் செய்யும் நிலையும் உண்டாகும். 8-ஆம் திகதியில் பிறந்தவர்கள் நன்மைகள் கிடைக்க புதன்கிழமை தோறும் சனீஸ்வர பகவானுக்கும் மகாலட்சுமிக்கும் தீபம் ஏற்றி வழிபாடு செய்து வர வேண்டும்.

8-ஆம் திகதியில் பிறந்தவர்கள் கலைத் துறையில் மிகக் குறைவாகவே இருப்பதைக் காணலாம். இவர்கள் கலை சம்பந்தப்பட்ட துறையில் டெக்னீஷியன்களாகவும் நுட்ப மான செயல்கள் செய்பவர்களாகவும் அதிகம் காணப்படுவார்கள். இவர்களுக்கு 8-ன் ஆதிக்கமும் தொழில் எண் 9-ன் ஆதிக் கமும் மிக அதிகமாக இருக்கும். தொழில் உதவி எண்கள் 3, 5-ன் ஆதிக்கத்தைப் பொறுத்து பொருளாதார நிலையும் புகழும் கிடைக்கப் பெறுவார்கள். தொழில் எண் ஆதிக்கமும் உதவி எண்களின் ஆதிக்கமும் நன்றாக இருந்தால் இவர்கள் அனைத்து விதமான கலை சம்பந்தப்பட்ட துறைகளிலும் முத்திரை பதிக்கக் கூடியவர்களாக இருப் பார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் அஷ்டா வதானி என்று அழைக்கப்படும் நிலையைப் பெறக் கூடியவர்கள். தெய்வ பலமும் நம்பிக் கையும் இவர்களைத் தாணாகவே முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும். தொழில் எண் மற்றும் உதவி எண்களின் ஆதிக்கம் பெற சனிக் கிழமை தோறும் நடராஜரையும் சிவகாமியை யும் வழிபட நன்மைகள் பல பெறலாம்.

பிறந்த திகதி 8, விதி எண் 1-ஆக உள் ளவர்களுக்கு வாழ்நாளில் அதிகபட்ச மாக 17 வருடம் முதல் 26 வருடம் வரை யோக பலன்கள் உண்டாகும். பிறந்த திகதி 8, விதி எண் 2-ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் எண் ஆதிக்கத்தைப் பொறுத்து 17 ஆண்டு களும், 8 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும்

**எஸ்.என்.ஹரிஜி**

17 ஆண்டுகளும் யோக பலனைக் கொடுக் கும். பிறந்த திகதி 8, விதி எண் 3-ஆக உள் ளவர்களுக்கு 26 ஆண்டுகள் யோக பலன் கள் கொடுக்கும். பிறந்த திகதி 8, விதி எண் 4-ஆக உள்ளவர்களுக்கு மிக அதிகபட்சமாக 35 ஆண்டுகள் யோக பலனைக் கொடுக்கும். பிறந்த திகதி 8 விதி எண் 5 ஆக உள்ளவர் களுக்கு மிக அதிகபட்மாக 27 ஆண்டுகள் யோக பலன் கிடைக்கும். பிறந்த திகதி 8, விதி எண் 6-ஆக உள்ளவர்களுக்கு 15 ஆண்டு கள் குறைந்த பட்சமாகவும் 33 ஆண்டுகள் அதிகபட்ச மாகவும் யோக பலன் கள் கிடைக் கும். பிறந்த திகதி 8, விதி எண் 7-ஆக உள்ள வர்களுக்கு 25 ஆண்டுகள் யோக பலன் கிடைக்கும். பிறந்த திகதி 8 விதி 8 ஆக உள்ள வர்களுக்கு அவர்களின் எண்ணத்தைப் பொறுத்து 8 ஆண்டுகள் அல்லது 14 ஆண்டு கள் என்று இடைவெளி விட்டுயோக பலன் கள் கிடைக்கும். பிறந்த திகதி 8, விதி எண் 9-ஆக உள்ளவர்களுக்குத் தொடர்ந்து யோக பலன்கள் செய்து கொண்டே இருக்கும். தத் தம் செயல்களைப் பொறுத்து அளவுகள் மாறு படும். மிக அதிகமாக 36 ஆண்டுகள் வரை யோக பலன்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

குறிப்பு :- பிறந்த திகதி எண், விதி எண், தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத் தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும். (தொடரும்)



யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் வரவேற்பு நடனத்தையும் வித்தியாலய அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் பிரதமவிருந்தினருக்கு வித்தியாலய அதிபர் நினைவுப்பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-என்.குமார் )

# இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்கள்

5

**கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த 2, 3, 4 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழா ஆய்வரங்கில் அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

சில சர்வதேச கருத்தரங்குகளில் இவர் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். 'சங்கக் கவிதைகளை எப்படிப் பார்ப்பது?' (சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ் இலக்கியத்துறை, சென்னை, 24.1.2007), 'சங்கப் பாடல்கள் புதிய பார்வை' (பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 18.01.2007), 'இலங்கையில் பத்திரிகைகளின் வரலாறும் வளர்ச்சியும் (சென்னைப்பல்கலைக்கழகம், தமிழ் இலக்கியத்துறை டிசம்பர் 22 2002), 'கடந்த நூற்றாண்டில் இலங்கைத் தமிழ் நாவல்' (தமிழ் இனி, சர்வதேசக் கருத்தரங்கு ஹோட்டல் அட்லாண்டிக், செப்.1, 2, 3-2000), 'இலங்கைத் தமிழரிடையே வாய்மொழி இலக்கியம்' (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை டிசம்பர், 2000), அகப்பாடல்களில் எடுத்துரைப்பு முறைகள் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, டிசம்பர் 1998) போன்ற கட்டுரைகளே இவர் சர்வதேச கருத்தரங்குகளில் சமர்ப்பித்த ஆராய்சசிக் கட்டுரைகளாகும்.

தேசிய மட்டத்திலான கருத்தரங்குகளில் இவர் சமர்ப்பித்த ஆராய்ச்சிக்கட்டுரைகள் இவரின் பரந்துபட்ட ஆய்வுப் புலத்தை இனங்காட்டுவதாக உள்ளது. 'சுவாமி விபுலானந்தரின் தமிழியல் ஆய்வுகள்' (2007), 'பக்தி இலக்கியத்தில் திணைக்கோட் பாடு' (2007), 'சி.வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்பு முயற்சிகள்' (2007), 'சங்க இலக்கியத்தில் நிலப்பிரிவுகளும் வாழ்க்கை முறையும்' (2006), 'சங்க இலக்கியத்தில் பெண்கள்', (2003), 'சங்க மருவிய கால இலக்கியத்தில் பெண்கள்' (2003) ,'பெண்களின் புனைவு இலக்கியத்தில் பெண்கள்' (2002), 'ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாவல்கள்' (2000), 'ஊர்களின் அடையாளப்படுத்தலில் கோயில்கள்' (2000), 'தகவல் தொடர்புசாதனங்களில் கருத்து நிலை (1999). 'பன்னிரு பட்டியலில் கட்டமைக்கப்பட்டுள்ள வருணப்பாடும் பால்பாகு பாடும்'(2000), ' கைலாசபதியும் நாவலர் ஆய்வுகளும் - பன்முக ஆய்வில் கைலாசபதி' 'யாழ்ப்பாணத்து வாழ்வியற் நாவலர் ஆய்வுகளும் -பன்முக ஆய்வில் கைலாசபதி' 'யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள்' (2004), ' வடமராட்சி வடக்குக் கரையோர மக்களிடையே நிலவும் பிறப்புச் சடங்கு'' போன்ற கட்டுரைகள் இவருடைய ஆய்வின் பரந்துபட்ட தளத்தைக் காட்டி நிற்கின்றன.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

சிறந்த சமூக சேவகியும், ஆன்மீகச் சொற்பொழிவாளருமான செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சில ஆய்வு முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார். பாலபண்டிதர், பண்டிதர் என்பவற்றுடன், இராமநாதன் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர் போன்ற கல்வித் தகைமைகளைக் கொண்ட இவருடைய ஈழத்துத் பிரபந்தங்கள்' என்ற ஆய்வுக் கட்டுரை முக்கியமான ஒன்றாகும். இவ்வாய்வுக் கட்டுரை ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பாராட்டையும் பதக்கத்தையம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதிய ' பெண்மைக்கு இணையுண்டோ?' என்ற நூல் இவருடைய இலக்கிய ஆய்வுத்திறனை வெளிக்கொணரும் நூலாக உள்ளது. சங்ககாலப் பெண்மை, திருவள்ளுவர் காட்டிய பெண்மை, இளங்கோ காட்டிய பெண்மை, சேக்கிழார் காட்டிய பெண்மை, கச்சியப்பர் காட்டிய பெண்மை, கம்பர் காட்டிய பெண்மை,பரஞ்சோதி முனிவர் காட்டிய பெண்மை , பாரதி காட்டிய பெண்மை என்ற தலைப்புகளில் அவர் பெண்மையை ஆராய்ந்துள்ளார்.'' கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் இலக்கியப் புலமையும், கட்டுரைத் திறனும் இந் நூலூ பாகப் புலப்படுத்தப்படுகின்றன'' என்ற பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் கூற்று அம்மையாரின் இலக்கியப் புலமைக்கு சான்றாகும்.

இவருடைய படைப்புக்கள் குறித்து திருமதி பத்மா சோமாகாந்தன் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்**

" இவர் எழுதிய நூல்கள் சிலவே என்ற போதிலும், அவை அறிவுப் புதையல்களாக விளங்குகின்றன. கோயிற் கிரியைகளும் நோன்பும் , நவராத்திரி, கந்தபுராணச் சொற்பொழிவு,மலேசியச் சொற்பொழிவுகள், லண்டனில் ஏழு வாரம் என்பவை அச்சுருவில் வெளிவந்த அவரின் நூல்கள். கந்தபுராணச் சொற்பொழிவு நூல் அரசாங்கத்தின் சாகித்திய விருதைப் பெற்றது. (தொடரும்)

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் மொழிபெயர்ப்பு நூல்களின் அரங்கு

இலங்கையில் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் மொழிபெயர்ப்பு அரங்கும் இடம் பெறவுள்ளது.

குறிப்பிட்ட அரங்கில் கண்காட்சிக்காக இதுவரையில் வெளியான தமிழ்–ஆங்கிலம், ஆங்கிலம்- தமிழ்மொழி பெயர்ப்பு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்பாளிகள் மற்றும் இலக்கிய மொழிபெயர்ப்பாளர்கள் தமது முயற்சியினால் ஏற்கனவே வெளியான நூல்களை அனுப்பி வைக்கலாம்.

சிறுகதை, நாவல், கவிதை, வரலாறு, சிறுவர் இலக்கியம் மற்றும் பிற மொழி இலக்கியங்கள் இக் கண்காட்சியில் இடம் பெறவுள்ளன.

குறிப்பிட்ட மொழிபெயர்ப்பு நூல்களை இக்கண்காட்சியில் இடம்பெறச் செய்வதற்காக எழுத்தாளர்களினது மொழிபெயர்ப்பாளர்களினதும் ஆதரவு கோரப்படுகிறது.

எனவே மொழிபெயர்ப்பு நூல்கள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கண்காட்சி முடிவுற்றதும் உரிய முறையில் அவை திருப்பி அனுப்பி வைக்கப்படும் மொழிபெயர்ப்பு நூல்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பவேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி International Tamil Writers Foruk 3B, 46th Lane, Colombo -6, Sri Lanka. (ஶ்ரீ-2)

# அடுத்த சுதந்திர தினவிழா கதிர்காமத்தில்

இலங்கையின் அடுத்த சுதந்திர தின விழாவை மொனராகலை மாவட்டத்தின் கதிர்காமத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய மொனராகலையில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி கதிர்காமர் ராஜவீதியில் சுதந்திர தின அணிவகுப்புகள் நடைபெறும் என்றும் சுதந்திரத் தினத்தையொட்டிய தேசத்திற்கு மகுடம் கண்காட்சி மொனராகலை மாவட்டத்தின் புத்தளவில் 10 நாட்களுக்கு நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆயிரத்து 500 கோடி செலவில் மொனராகலையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதில் குளங்கள், வீதிகள், வைத்தியசாலைகள் புனரமைப்பு உட்பட பல அபிவிருத்தித்திட்டங்கள் சுதந்திரத் தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# யுத்தத்தால் விதவையானோருக்கு அரச காணிகளில் 200 வீடுகள்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய அரசின் உதவியுடன் 12ஆயிரத்து 500 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதன் முதற் கட்டமாகவும் முன்னுரிமை அடிப்படையிலும் 200 வீடுகளை விரைவாக அமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இருநூறு வீடுகளும் யுத்தம் காரணமாக விதவைகளானவர்களுக்கு வழங்கப்படும் என முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வேதநாயகன் கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய அரசின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 12ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

காணிகளைச் சொந்தமாகக் கொண்டவர்களுக்கே இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இருப்பினும் யுத்தத்தால் கணவன்மாரை இழந்த விதவைக் குடும்பங்களுக்கு அரச காணிகளில் 200 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்கான அரச காணிகளும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுதவிர, ஏனைய 12 ஆயிரத்து 300 வீடுகளும் முன்னுரிமை அடிப்படையிலேயே நிர்மாணித்துக்கொடுக்கப்படவுள்ளன.

இதுவரை, இந்த மாவட்டத்தில் 58 ஆயிரத்து 268 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இன்னும் 21 ஆயிரம் பேர் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 500 பேர் இங்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். இந்த வருட இறுதிக்குள் அனைவரும் மீள்குடியேற்றப்பட்டு விடுவர்.

மீள்குடியமர்த்தப்படும் மக்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. தற்போது குடியேற்றப்பட்டுள்ள மக்களில் விவசாயிகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

உலக உணவு விவசாய ஸ்தாபனம் அவர்களுக்குத் தேவையான விதை நெல்லை வழங்கி வருகிறது.

அதேவேளை, மானிய அடிப்படையில் உரம் வழங்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார். (ஶ்ரீ-2)




யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் இன்ரறக்கட் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்களும் அருட்தந்தையர்களும் ஆசிரியர்களும் இணைந்து 230 பேர் இரத்ததானம் செய்திருந்தனர்.

# கிளி.சந்தை நிரந்தர இடத்தில் அமைக்கப்பட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி சந்தையின் நிரந்தரமற்ற நிலையை மாற்றி நிரந்தர இடத்திலேயே வைத்து அபிவிருத்தி செய்யவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி அரச செயலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் இடம்பெற்ற கிளிநொச்சி சந்தை விவகாரம் மற்றும் பிரதேசசபைகள் கூட்டுறவுச்சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

கிளிநொச்சி பொதுச் சந்தை கடந்த காலங்களில் பல இடங்களில் செயற்பட்டு வந்திருக்கிறது. அந்த வகையில் தற்போது இந்தச் சந்தை கிளிநொச்சி அம்பாள் நகரில் இயங்கி வருகிறது. இந்தச் சந்தை மாவட்டத்தின் முதன்மைச் சந்தையாகும். இந்தச் சந்தையை அமைப்பது தொடர்பில் தீர்மானங்கள் எடுத்து நடைமுறைப்படுத்தியது. வரை எம்முடன் இது தொடர்பாக முன்னேற்றபாடாக கலந்துரையாடப்பவில்லை.

ஆனால் மீளக்குடியேறியுள்ள மக்களும் வர்த்தகர்களும் இந்தச் சந்தையில் மீண்டும் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்றனர். இந்த நிலையில் இந்தச் சந்தையை வேறு இடங்களுக்கு நகர்த்துவது பொருத்தமற்றது. ஆகவே , நகர விரிவாக்கல் திட்டத்தின் அடிப்படையில் இப்போது உள்ள இடத்தில் சந்தையை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை உள்ளது. அத்தோடு இந்த சந்தை தொடர்பில் பிரதேச சபை நடந்துகொண்ட முறைகளில் நிறைய அதிருப்திகள் உள்ளன. இனி மேல் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை ,புதிய சந்தை காரணமாக தங்களுடைய காணிகளை இழந்த 13 குடும்பங்களுக்கும் நியாயமான முறையில் மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் அந்த 13 குடும்பங்களுக்கும் வீட்டுத்திட்டத்துடன் கூடிய காணிகள் சந்தையை அண்டிய பிரதேசங்களில் வழங்குவதோடு சந்தைத் தொகுதியில் முன்னுரிமையாக வியாபார நிலையமும் வழங்கப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் சந்தை நடவடிக்கைகள் அனைத்தும் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதோடு நடமாடும் விபாயாரத்தை உடனடியாக கட்டுப்படுத்த பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பை பெற வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

போக்குவரத்துத் தொடர்பான விடயத்தில் தனியார் போக்குவரத்துத்துறையின் குறுந்தூர சேவைகள் அனைத்தையும் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து செயற்படுத்துமாறும் நீண்டதூர சேவைகளை (கிளிநொச்சி-யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி -வவுனியா போன்ற சேவைகளை) பழைய சந்தையின் உட்புறத்தில் இருந்து செயற்படுத்துமாறும் இனி மேல் வீதியில் வைத்து சேவை களை மேற்கொள்ள வேண்டாம் எனவும் கூறப்பட்டது.

அடுத்ததாக கூட்டுறவுச்சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பான விடயத்தில் காலத்திற்கேற்ப செயற்பாடுகளை கொண்டு நடத்த வேண்டும் என்றும் இம் மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களுக்கு 5 அரைக்கும் ஆலைகளை 9 மில்லியன் ரூபாக்களில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் அமைத்துத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இந்தக் கூட்டத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி,உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன், கண்டாவளை,பளைப்பிரதேச செயலாளர்களான சத்தியசீலன் மற்றும் முகுந்தன்,கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ,பிரதேச சபை செயலாளர் கள் ,கூட்டுறவு சங்க உத்தியோகத்தர்கள் ,வர்த்தக சங்கத் தலைவர் , அம்பாள் குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்,கிராம அலுவலர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# பிரான்ஸில் வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டத்தால் மக்களின். இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்பு

பிரான்ஸ் அரசாங்கம் ஊழியர்களின் ஓய்வு பெறும் வயது எல்லையை 62 ஆக அதிகரித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு பல்வேறு தரப்பினரும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த பல தினங்களாக பிரான்ஸில் இடம்பெற்று வரும் வேலை நிறுத்தம் மற்றும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்பனவற்றில் பங்கு ஏற்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் என பல்வேறு பிரிவினரும் இதில் பங்கேற்று வருகின்றனர். இதனால் பிரான்ஸில் விமான நிலையங்கள் உட்பட சில இடங் களில் எரிபொருள் விநியோகத்தில் கட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது. சில முக்கிய எரிபொருள் நிலையங்களை பொலிஸார் பலவந்தமாக திறக்கச் செய்துள்ளனர். பிரான்ஸின் 12 எரி பொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் வேலை நிறுத்தம் காரணமாக மூடப்பட்டுள்ளன. இன்னும் சில எரிபொருள் விநியோக நிலையங்கள் ஆர்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டு செயலிழந்துள்ளன. பிரான்ஸின் சுரங் கப்புகையிரத சேவை,புகையிரத சேவை, வைத்திய சாலை சேவை, பாடசாலைகள் என பல்வேறு பிரிவுகளும் இந்த வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டம் என்பனவற்றால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

# ஐ .ம.சு. கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபை தேர்தல் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபை திருத்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் தமது வேட்பாளர் தெரிவுகளை ஆரம்பிக்கவுள்ளதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே மாகாண சபைகளின் அனுமதிகள் கிடைத்தவுடன் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து பரிந்துரைகளுக்கு அமைய அந்தந்த தொகுதிகளில் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய பிரதிநிதிகளை தெரிவு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஐக்கிய தேசிய கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பாளர் தெரிவுகளை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளது.

தற்போது பரிந்துரைக்கக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி திருத்த சட்டமூலத்திற்கு ஏற்ற வகையில் தமது பிரதிநிதிகளை தெரிவு செய்யவுள்ளதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பதினேழாவது ஆண்டு நிறைவு விழா

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இன்று தனது 17 ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடவுள்ளது. கடந்த 1993 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கடந்த 17 ஆண்டுகளாக இலங்கை ஆசிரியர் கல்வித்துறையில் சேவையாற்றி வந்துள்ளது.

தற்போது இலங்கையிலுள்ள 18 தேசியக் கல்வியியற் கல்லூரிகளில் ஒன்றான வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மூவின மாணவர்களையும் நான்கு மதத்தை சார்ந்த மாணவர்களைய்யும் தேசிய ரீதியாக உள்வாங்கி மூன்று மொழிகளிலும் பயிற்சியளிக்கக்கூடிய சிறப்பானதொரு கல்லூரியாகும்.

இலங்கையில் ஆசிரியர் முன் கல்வி வழங்கும் நிறுவனங்களான தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 25 ஆண்டுகள் நிறைவுற்று இருக்கின்ற நிலையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் 25 வருடகால வரலாற்றில் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி 17 ஆண்டுகள் நிறைவு செய்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெரும்பாலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் மலையகம் உட்பட்ட தேசியத்திற்கு இதுவரை ஏறக்குறைய 3ஆயிரம் வரையான தரமான ஆசிரியர்களை உருவாக்கியுள்ள பெருமையுடன் தனது கல்லூரி தினத்தை கொண்டாடவுள் ளது.

ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, விஞ்ஞானம் ஆகிய மூன்று தமிழ், சிங்கள மொழி மூல பயிற்சிநெறிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இன்று பத்து பயிற்சி நெறிகளை மும்மொழிகளிலும் நடத்துமளவிற்கு மாணவர்களை உள்வாங்கக் கூடியதாக மாற்றப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையமாக பயன்படுத்தப்பட்டதனால் கடந்த 2009 மற்றும் 2010 இல் புதிய மாணவர்களை அனுமதிக்க முடியாது போனமை கவலைக்குரியதாகும். எவ்வாறாயினும் அடுத்த ஆண்டில் புதிய மாணவர்களை மீண்டும் அனுமதிக்கவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா பல்நோக்கு மண்டபத்தில் பீடாதிபதி க.பேர்ணாட் தலைமையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் ENREP நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் கலாநிதி (பொறியியலாளர்) எஸ்.எஸ். சிவகுமார் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் ஓய்வுபெறப்போகும் கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சோ. சந்திர சேகரன், அண்மையில் பேராசிரியர் நிலைக்கு தரம் உயர்த்தப்பட்ட கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியர் மா.கருணாநிதி மற்றும் கலாநிதி எஸ்.எஸ். சிவகுமார் (பொறியியலாளர் ENREP), கலாநிதி.கந்தையா. சிறிகணேஸ் (யாழ்.பல்கலைக் கழகம்,வவுனியா வளாகம்), கலாநிதி அ.புஸ்பநாதன் (யாழ். பல்கலைக்கழகம்,வவுனியா வளாகம்), கலாநிதி .திருமதி. ந.அனந்தினி (யாழ்.பல் கலைக் கழகம்,வவுனியா), கலாநிதி .ந.இரவீந்திரன் (முன்னாள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, உபபீடாதிபதி – தொடுரு கல்வி, தற்போது தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி), கலாநிதி செல்வி.நி.நல்லையா (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியயோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அன்றைய தினம் உள்ளக ஆசிரியர்களினதும் பாடசாலை மாணவர்களினதும் கலை நிகழ்வுகளும் இடம்பெறுவதோடு இவ் விழாவையொட்டி நடத்தப்பட்ட வலைப் பந்தாட்ட, உதைப் பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகளும் இன்றையதினம் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

# ஒற்றைத் தண்டவாள நவீன புகையிரத சேவையை அறிமுகப்படுத்துவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

பாலம் ஊடான ஒற்றை தண்டவாளத்தில் பயணிக்கக் கூடிய நவீன புகையிரத சேவைகளை இலங்கையில் அறிமுகப்படுத்துவது குறித்து போக்குவரத்து அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

இந்த புகையிரத சேவையை ஆரம்பத்தில் கொழும்பு மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் நிர்மாணிக்கலாமா என ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ரக புகையிரத சேவையினை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கான தொழிநுட்ப மற்றும் நிதியுதவி யினை வழங்க பல நாடுகள் ஏற்கனவே முன்வந்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். ஒற்றை தண்டவாள புகையிரத திட்டம் சாத்தியப்படும் பட்சத்தில் இரத்மலானை மற்றும் பத்தரமுல்லைக்கு இடையே முதலில் ஏற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் போக்குவரத்து சேவையினை ஸ்தாபிப்பதற்கு ஆரம்ப செலவீனம் பெரும் தொகையாக இருக்கும் என தெரிவித்த அமைச்சர் அண்மையில் இந்த நவீன சேவை குறித்து நேரடியாகத் தகவல்களை சேகரிக்க தாம் கொரியா சென்றிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி சபை திருத்தத்திற்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

திருத்தம் செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைச் சட்டமூலத்தை எதிர்வரும் மாதத் திற்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றிக்கொள்ள போவதாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை பிரதியமைச்சர் இந்திக பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தத் திருத்த சட்டமூலத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதுடன் எதிர்வரும் நாட்களில் அதனை மாகாண சபைகளின் அனுமதிக்காக முன்வைக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னரே திருத்த சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். புதிய திருத்தச் சட்ட மூலத்திற்கிணங்க உள்ளூராட்சி சபைகளுக்கு 70 சதவீதம் தொகுதி அடிப்படையிலும் மிகுதியை விகிதாசார அடிப்படையிலும் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யவுள்ளதாக பிரதியமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இந்திய விஜயம் மேற்கொள்ளும் ஒபாமா நாடாளுமன்றில் உரையாற்றவுள்ளார்

(டில்லி)

இந்தியாவிற்கு ஐந்து நாள் பயணமாக வருகை தரும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் உரையாற்ற வுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின் முதன் முறையாக ஒபாமா அடுத்த மாதம் ஐந்தாம் திகதி இந்தியா வருகை தரவுள்ளார்.

அப்போது மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு உள்ளான தாஜ்ஹோட்டலை அவர் பார்வையிடவுள்ளார்.

மும்பையிலிருந்து தனது ஐந்து நாள் பயணத்தைத் தொடங்கவுள்ள ஒபாமா , பஞ்சாப் மாநில அம்ரித்ஸர் பொற்கோவிலுக்கும் செல்லவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 8 ஆம் திக திடில்லி செல்லும் அவர், நாடாளுமன்ற இரண்டு அவைகளின் உறுப்பினர் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

அதைத் தொடர்ந்து எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்ற குளிர் காலக் கூட்டத் தொடர் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பாரிய ராடர் கட்டமைப்புக்களை ஸ்தாபிப்பதற்கு இந்தியா திட்டம்

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி மும்பையில் இடம்பெற்ற அதிரடி தாக்குதலை அடுத்து ஏற்பட்ட பாரிய உயிர் மற்றும் BR சொத்து இழப்புகள் போன்று மீண்டும் ஏற்படாத வகையில் இந்திய மத்திய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் , சீனா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து பயங்கரவாதக் குழுக்கள் மற்றும் சட்டவிரோத குடியேறிகள் ஊடுருவதைத் தடுக்க நவீன ராடர் கருவிகள் பெரும் பங்களிப்பை அளிக்கும் என நிபுணர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக நாடளாவிய ரீதியாக கடற்பிராந்தியங்களை கண்காணிக்கும் நோக்கில் ராடர் கட்டமைப்புகளை பொருந்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருவிகளின் மூலம் சட்டவிரோதமாக இந்திய மண்ணில் நுழைய முற்படுபவர்களை துல்லியமாக கண்டறிய முடியும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ராடர் கட்டமைப்புகளை பொருத்துவதற்காக 350 கோடி இந்திய ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. உள்துறை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கரையோரக் காவல்படையினரால் பொருத்தப்படவுள்ள ராடர் கருவிகள் இந்தியாவின் 7 ஆயிரத்து 517 கிலோமீற்றர் நீளமான கரையோரங்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் என மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுதவிர அந்தமான் , நிக்கோபர் தீவுகள் மற்றும் லக்ஷன் திவீப் தீவுகளை உள்ளடக்கிய கடற்பிராந்தியமும் இந்த ராடர்களின் உதவியுடன் இலகுவாக கண்காணிக்க முடியும் எனவும் ராடர் கருவிகள் தெரிந்தெடுக்கப்பட்ட 46 கரையோரப் பிரதேசங்களில் ஸ்தாபிக்கப் படுவதில் 36 பெரு நிலப்பரப்புகளில் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை பாதகமான கடற் கொந்தளிப்பான காலப்பகுதியில் கூட இந்த நவீன ரக ராடர் கருவிகள் இலக்கினை துல்லியமாக வெளிப்படுத்தக் கூடிய தன்மையை கொண்டுள்ளதாகவும் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் மூலம் இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளுக்கிடையே இடம்பெறும் பயங்கரவாதம் மற்றும் கடத்தல் போன்ற நடவடிக்கைகளை மட்டுப்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மத்திய அமைச்சரவையில் விரைவில் மாற்றம்; இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கத் திட்டம்

## காங்கிரஸ் மேலிடத்திடம் மன்மோகன் ஆலோசனை

(புதுடில்லி)

மத்திய அமைச்சர்கள் சிலரின் செயற்பாடுகள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே அமைச்சரவையை மாற்றி அமைக்க மன்மோகன் சிங் முடிவுசெய்துள்ளார். இது சம்பந்தமாக அவர் காங்கிரஸ் மேலிடத்தில் ஆலோசனை நடத்தி வருகிறார்.

எனவே விரைவிலேயே அமைச்சரவை மாற்றம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மன்மோகன் சிங் எதிர்வரும் 24ஆம்திகதி ஜப்பான் மற்றும் மலேசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்கிறார். அதற்கு முன்னதாகவே அமைச்சரவை மாற்றம் இருக்கலாம் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

24ஆம் திகதிக்கு முன்பு அமைச்சரவை மாற்றம் நடக்கவில்லை என்றால் அடுத்து 2 மாதத்துக்கு பின்னரே மாற்றம் செய்ய முடியும்.

மன்மோகன்சிங் வெளிநாடு சென்று திரும்பியதும் நவம்பர் 5 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா இந்தியா வருகிறார். நவம்பர் 9 ஆம் திகதி பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்குகிறது. எனவே அந்தக் கால கட்டங்களில் அமைச்சரவை மாற்றத்தை செய்ய முடியாது.


எனவே முன்கூட்டியே அமைச்சரவை மாற்றம் செய்யவில்லை என்றால் 2 மாதம் காத்திருக்க வேண்டி வந்துவிடும். இதனால் விரைவிலேயே அமைச்சரவை மாற்றம் நடக்க அதிக வாய்ப்புள்ளது.

மத்திய அமைச்சர்கள் ஜெயபால் ரெட்டி, எம்.எஸ்.கில் ஆகியோர் மாற்றப்படலாம் என்று கூறப்படுகிறது. இதில் ஜெயபால் ரெட்டி ஆந்திர மாநிலம் தெலுங்கானா பகுதியைச் சேர்ந்தவர். அவரை மாற்றினால் தெலுங்கானா மக்கள் அதிருப்தி அடைவார்கள். இந்த காரணங்களால் அவர் தப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர்களான ஜெயராம் ரமேஷ், ஹாண்டிக் ஆகியோரும் மாற்றப்படலாம் என்று பேச்சு அடிபடுகிறது.

மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கு மேலும் ஒரு அமைச்சர் பதவி வழங்க பிரதமர் முடிவுசெய்துள்ளார். அந்தக் கட்சியின் கொறடா சுதிப்பண்டோ வத்யாயா அமைச்சர் ஆகலாம்.

பல்வேறு மாநி லங்களில் கட்சி மேலிட பொறுப்பாளர்களாக இருப் பவர்களும் அமைச்சர்களாக இருக்கின்றனர். ஒருவ ருக்கு ஒரு பதவி என்ற முறையில் இவர்கள் அமைச்சர் பதவிகளில் இருந்து விடுவிக்கப்படலாம் என்று தெரிகிறது. அப்படி நடந்தால் குலாம்நபி



ஆசாத், பிரதிவிராஜ் சவுகான், வீரப்ப மொய்லி ஆகியோர் அமைச்சர் பதவியை இழப்பார்கள் அல்லது கட்சி மேலிட பதவியில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

இன்னும் சில சிரேஷ்ட அமைச்சர்களின் செயற்பாடுகளும் அதிருப்தி அடையும் நிலை யில் இருக்கிறது. அவர்களையும் நீக்க அதிக வாய்ப்புள்ளது.

சில அமைச்சர்களின் இலாகாக்கள் மற்றவர்களுக்கு மாற்றிகொடுக்கப்பட இருக்கிறது. தேசிய வாத காங்கிரஸ் அமைச்சரான பிரபுல் பட்டேல் தற்போது விமானப் போக்குவரத்து அமைச்சராக இருக்கிறார். அவர் வர்த்தக துறையை கேட்டு வருகிறார்.

எனவே வர்த்தகத்துறை அவருக்கு ஒதுக்கப்படலாம். வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மாவுக்கு வேறு இலாகா வழங்கப்படும் . அமைச்சரவையில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மன்மோகன்சிங் முடிவுசெய்துள்ளார். எனவே அமைச்சரவை மாற்றத்தின்போது இளைஞர்கள் பலர் அமைச்சர் ஆவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கர்நாடக அரசியல் குழப்பம் முடிவுக்கு வந்தது

கர்நாடகாவில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் அமைச்சரவையை மாற்றி அமைக்க முதலமைச்சர் எடியூரப்பா முடிவுசெய்துள்ளார்.

எடியூரப்பாவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய 6 அமைச்சர்கள் நீக்கப்பட்டனர். இதனால் அந்த இடம் காலியாக உள்ளது. இதை நிரப்பவும் ஆட்சி கவிழ்ப்பு முயற்சியின் போது பக்கபலமாக இருந்து காப்பாற்றிய சிலருக்கு அமைச்சுப் பதவி அளிக்கவும் இந்த மாற்றத்தை எடியூரப்பா செய்யவுள்ளார். ஆட்சியைக் காப்பாற்றுவதில் ரெட்டி சகோதரர்களான அமைச்சர்கள் ஜனார்தன ரெட்டி மற்றும் கருணாகரரெட்டி ஆகியோர் மும்முரமாக செயல்பட்டனர். எனவே அவர்களில் ஒருவருக்கு துணை முதலமைச்சர் பதவி அல்லது அமைச்சரவையில் 2ஆம் இடம் வழங்க எடியூரப்பா முன்வந்துள்ளார். ஆனால் துணைமுதலமைச்சர் பதவி வேண்டாம் என்று அவர்கள் கூறிவிட்டனர். எனவே 2ஆம் இடம்கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தம் 10 புதிய அமைச்சர்கள் சேர்க்கப்படவுள்ளனர். தற்போதுள்ள மந்திரிகளில் 4பேர் நீக்கப்படுகின்றனர். இதேவேளை பதவி நீக்கத்துக்கு எதிராக 16 எம்.எல்.ஏ.க்கள் தொடர்ந்த வழக்கில் இன்று தீர்ப்பு வருகிறது. அதன்பிறகு அமைச்சரவை மாற்றம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். (ஸ்ரீ-2)




# அயோத்தி தீர்ப்பை எதிர்த்து முறையீடு


அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தை இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இரண்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் பிரித்தளித்த அலாகாபாத் உயர் நீதிமன்ற லக்னோ கிளையின் தீர்ப்பை எதிர்த்து இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய அகில இந்திய முஸ்லிம் தனிநபர் சட்டவாரியம் முடிவு செய்துள்ளது.

சர்ச்சைக்குரிய இடம் தொடர்பாக கடந்த செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வழங்கப்பட்ட தீர்புக்கு குறித்து லக்னோவில் கூடி விவாதித்த முஸ்லிம் தலைவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட இடம் குறித்த வழக்கு ஓர் சொத்துரிமை வழக்காகப் பார்க்கப்பட வேண்டுமே தவிர மத மற்றும் இதர நம்பிக்கைகள் அடிப்படையில் அதை அணுகி தீர்ப்பளிப்பது பாரதூர பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் இத்தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக இக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஜவஹிருல்லா தெரிவித்தார்.

மேலும் இந்தத் தீர்ப்பை விமர்சித்துள்ள பிரபல வழக்கறிஞர்களை வைத்து முக்கிய நகரங்களில் விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த வழக்கில் மனுதாரரான உத்தரப் பிரதேச வக்ப் வாரியம் மேல் முறையீடு செய்யும்போது, இந்தியாவின்பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் அதில் தங்களை இணைத்துக் கொள்ள வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



மதுரையில் நடைபெற்ற "போர்முகங்கள்" என்ற ஓவியக் கண்காட்சியை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பார்வையிடுவதையும் அருகில் ஓவியர் புகழேந்தி, ஆலோசனைக் குழு உறுப்பினர் சின்னசெல்லம் , நகர செயலாளர் பூமிநாதன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

எல்லாரும் ஏறி இளைத்த குதிரையில்
சக்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்தாராம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கலாமா?

ஒரு முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை சந்தித்தனர்.

அந்தச் சந்திப்பின்போது "புத்திசாலித்தனமாக அரசியல் நடத்துங்கள்" எனக் கருணாநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அறிவுரை கூறியிருந்தார்.

அவர் கூறிய அறிவுரையில் இருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளவில்லை என்பது தமிழகத்தின் கருத்து நிலையாக இருப்பதை உணரமுடிகிறது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புத்திசாலித்தனமாக அரசியல் நடத்தவில்லை என்ற தமிழகத்தின் கருத்துநிலை சரிதான் என்பதை இன்னமும் நிரூபித்துக்கொள்வதில் கூட்டமைப்பு சளைக்கவில்லை.

அதாவது வன்னியில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. வன்னியில் நடந்த யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்தும்படி ஐ.நா.சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் இலங்கை அரசிடம் கோரியிருந்தும் அதற்கு அரசு செவிசாய்க்கவில்லை.

இந்நிலையில், யுத்தக் குற்ற விசாரணையை ஐ.நா.சபை மேற்கொள்ளவேண்டும் என்ற சர்வதேச அழுத்தம் வலுப்பெற, அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை அந்த அமைப்பு மேற்கொண்டது.

நிலைமை முற்றிவிட்டதை உணர்ந்த இலங்கை அரசு அவசர அவசரமாக ஆணைக் குழு ஒன்றை நியமித்தது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரோடு களமிறங்கிய அந்தக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கு முன்னரும் பல்வேறு ஆணைக் குழுக்கள் இந்த நாட்டில் தோற்றம் பெற்றதும் பின்னர் அவை அஸ்தமித்துப் போனதும் தெரிந்த விடயங்களே.

இருந்தும் ஏழை மனம் சொல்லுக் கேட்காமல் பொது மக்கள் விசாரணைக்குழு முன் கண்ணீர் சொரிந்து தங்கள் வேதனையை கொட்டிக் கொண்டனர்.

சாமானிய மக்கள் ஆணைக்குழு மீது நம்பிக்கை வைப்பதில் எந்தத் தவறும் இல்லை.

அவர்கள் யாரிடமாவது முறையிட்டும் தங்கள் துன்பத்திற்கு முடிபு கட்டவே முற்படுவர். சில வேளைகளில் துன்பத்தைத் தந்தவனிடமே முறையிடும் பரிதாபங்களும் நடப்பதுண்டு.

அந்த வகையில் பொது மக்கள் சாட்சியமளிப்பதென்பதை பாரதூரமான விடயமாக கருத முடியாது.

மாறாக மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புகள், சர்வதேச ஸ்தாபனங்கள் சாட்சியமளிப்பதென்பது "சாட்சியம்" என்பதோடு மட்டும் நின்றுவிடாமல் குறித்த ஆணைக் குழுவை அங்கீகரித்தல் என்ற நிலைக்கும் இட்டுச் செல்லும்.

இந்நிலையில் மூன்று சர்வதேச அமைப்புக்களை சாட்சியமளிக்க வருமாறு ஆணைக்குழு விடுத்த அழைப்பை அந்த அமைப்புகள் அடியோடு நிராகரித்து விட்டன.

இது சர்வதேச அமைப்புகள் ஆணைக்குழு மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை உறுதி செய்துள்ளது.

யதார்த்தம் இதுவாக இருக்கும் போது பிரஸ்தாப ஆணைக்குழு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாட்சியமளித்தால், அது தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்டது என்பதற்கப்பால் விசாரணைக்கு மறுப்புத் தெரிவித்த சர்வதேச அமைப்புகள் மீது தமிழ் மக்கள் கரிபூசியதாகவும் முடியும். எதுவாயினும் சிந்தித்துச் செயற்படுங்கள்.

"நக்குண்டார் நாவிழந்தார்" என்ற பழமொழிக்கு பொருள் எழுதும் பரிதாபம் வேண்டாம்.

# பொன்சேகாவின் கட்சிக்காரர் ஜனாதிபதியை சந்திக்க முயற்சி

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் உறுப்பினரும் சரத் பொன்சேகாவுக்கு நெருங்கியவரும் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான டிரான் அலஸ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க வாய்ப்பைக் கோரியுள்ளார்.

முன்னதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்திக்க வாய்ப்பு கோரியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் விலக்கப்பட்ட முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் தூதுவராகவே இந்த சந்திப்பை மேற்கொள்ள முயற்சிப்பதாக கூறி கோத்தபாய ராஜபக்ஷ அவரின் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

இதனையடுத்தே டிரான் அலஸ் செய்தியாளரான துஸார குணரத்ன மூலமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்க வாய்ப்பை கோரியுள்ளார்.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்புக்குள் முறுகல் நிலை தோன்றியுள்ள நிலையிலேயே டிரான் அலஸின் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வர்த்தகரான டிரான் அலஸ் கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தாம் வெற்றி பெறுவதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பெருந்தொகைப் பணத்தை வழங்கினார் என்ற குற்றச்சாட்டை சுமத்தியதன் மூலம் அரசியல் தரப்பில் பெரிதாக பேசப்பட்டவராவார். (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்ற உத்தேச சட்டங்களால் சிறுபான்மை கட்சிகளுக்கு நன்மையில்லை

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்ற உத்தேச சட்டங்களினால் சிறுபான்மை கட்சிகளுக்கு நன்மையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் குறித்த உத்தேசசட்ட மூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அதற்கு ஆதரவளிப்பதா அல்லது அதனை எதிர்ப்பதா என்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உத்தேச உள்ளூராட்சி மன்ற சட்டத்திருத்தம் சிறிய அரசியல் கட்சிகளை ஓரங்கட்டும் முயற்சியாகக் கருதப்பட வேண்டுமென சிவில் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தப் புதிய திருத்தச் சட்டங்களின் மூலம் இருகட்சி அரசியல் கட்டமைப்பு உருவாகும் என தெரிவித்துள்ளன.

பெண்கள் மற்றும் இளைஞர்களுக்காக இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் இதனை ஆரோக்கியமான முயற்சியாக கருதப்பட முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளன.

சட்டத்திருத்தங்கள் உள்ளடக்கப்பட வேண்டுமென நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜே.பி.வி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சி ஆகியவற்றுக்கு இந்தத் தேர்தல் முறைமையினால் பாதிப்பு ஏற்படக்கூடுமென சுட்டிக் காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இந்தியாவின் தலையீட்டால் பிரபாகரனை முன்பு தோற்கடிக்க முடியவில்லை

## -வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன

இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனை முன்பு தோற்கடிக்க முடியவில்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி. வைத்திய கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் தலைநகர் லண்டனில் வைத்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது.

சர்வதேசத்தின் குறிப்பாக இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போரைத் தொடர்ந்து நடத்தி வே.பிரபாகரனைத் தோற்கடித்தார். அவருக்கு அதைத் தவிர மாற்று வழி எதுவும் இருக்கவில்லை.

வே.பிரபாகரனைக் கொல்கின்றமைக்காக ஜே.ஆர்.ஜயவர்த்தன போர் தொடுத்திருந்தார். ஆனால் இறுதி நேரத்தில் இந்தியா தலையிட்டு போரைநிறுத்திவைத்தது. இதுதான் ஆர்.பிரேமதாஸ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோருக்கும் நடந்தது.

பிரபாகரன் கொல்லப்படுகின்றமையையோ, தோற்கடிக்கப்படுகின்றமையையோ அன்று இந்தியா விரும்பி இருக்கவில்லை. ஆனால் இந்தியாவின் அந்நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. மஹிந்த போரைத் தொடுத்தபோது பிரபாகரன் அழிக்கப்பட வேண்டும் என்று இந்தியா விரும்பியது. இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

# விஞ்ஞானக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விஞ்ஞான சங்கத்தின் ஏ பிரிவின் அனுசரணையுடன் "யாழ்.மாவட்டத்தின் கட்டிளம் பருவத்தினருக்கும் வளர்ந்தோருக்குமான இனப்பெருக்க சுகாதார தேவைகள்" எனும் கருப்பொருளிலான இலவசக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு பௌதிகவியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமரன் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வலர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ்.விஞ்ஞான சங்கத்தின் 'ஏ' பிரிவின் செயலாளர் கலாநிதி குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி கேட்டுக்கொள்கிறார். (ஸ்ரீ)

## சுவாமி விவேகானந்தரின்

### மன உறுதியுடன் இருங்கள்



☆ ஒவ்வொரு மனித இதயத்தின் உள்ளும் மிக ஆழத்தில் ஆதி அந்தமில்லா, இறைவன் ஒளிந்து கொண்டிருக்கின்றான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன் ஆவான்.

☆ தன்னுடைய பலவீனங்கள், குற்றங்கள், பாவங்கள் எல்லாவற்றையும் வேறொருவரின் மேல் சுமத்துவது மனித இயல்பாக இருக்கிறது. நம்முடைய தவறுகளை உணர மறுப்பது தான் இதற்குக் காரணம்.

☆ எத்தனை நல்ல நூல்களை வாசித்தாலும் நம்மால் தூயவராக முடியாது. உண்மையை நாம் உணர வேண்டுமானால், தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். அப்போது மெய்யுணர்வு நம்முள் மலரத் தொடங்கும்.

☆ உங்களுக்குப் பிடித்ததை கடைப்பிடிப்பதுபோல மற்றவர்களும் அவரவருக்கு விருப்பமானவற்றை பின்பற்றும் சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏனென்றால் சுதந்திரம் இல்லாத எதுவும் வளர்ச்சி அடைவதில்லை.

☆ எந்த விடயத்தையும் நன்கு ஆராய்ந்து பாருங்கள். கொண்ட கொள்கை மற்றும் குறிக்கோளில் மனவுறுதியுடன் இருங்கள்.


Sampath
சிறந்த நன்மைகளுடனான சிறுவர் சேமிப்புக் கணக்குகள்

X SET
வளமான எதிர்காலத்தினை இளையதலைமுறைக்கு வழங்கும் சேமிப்புக் கணக்கு

Sampath DOUBLE S சேமிப்புக் கணக்கு
ஒவ்வொரு மாதமும் வட்டிக்கு போனஸ் வட்டி வழங்கும் சேமிப்புக் கணக்கு

SAVER
ஸ்ரீலங்காவில் அதிகூடிய வட்டி வழங்கும் சேமிப்புக் கணக்கு

Sanhinda Saver
50 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு மாதத்திற்கு இரண்டு முறை வட்டியுடன் இன்னும் பல சலுகைகளை வழங்கும் ஒரே சேமிப்புக் கணக்கு.



மிகுதியான ஈரப்பலாக்காய்

தேவையானவை
1. விரயம் செய்யாதவற்றில் சொற்பம்
2. தூர நோக்கு சேமிப்பு சிந்தனையில் ஒரு துளி


50 வயதிற்கு மேற்பட்ட பிரஜைகளுக்கு மாதத்திற்கு இரண்டு முறை வட்டியுடன் இன்னும் பல சலுகைகளை வழங்கும் ஒரே சேமிப்புக் கணக்கு. ஈரப்பலாக்கா வளரும் காலத்தில் அதனை காயவைத்து, அதன் வளர்ச்சியற்ற காலத்தில் அதனை உணவாக்கிக் கொள்ளும் தூர நோக்கு சேமிப்பு சிந்தனையுடன் செயற்பட்டவர்கள் எமது முன்னோர். அப்படியான பாரம்பரியத்தினை கொண்ட உங்களுக்கென பல சேமிப்பு முறைகள் எமது சம்பத் வங்கியிலுள்ளன. எனவே இந்த சேமிப்பு மாதத்தில் உங்கள் எதிர்காலத்தின் பொருட்டு சேமிக்க ஆரம்பிப்போம்.

சம்பத் வங்கி - உங்களுக்கான சேமிப்பகம்

www.sampath.lk Sampath Bank Fitch Ratings AA-(lka) தொலைபேசி இலக்கம்: 0112 30 30 50

சம்பத் வங்கி SampathBank

S.P.N. MOTORS
HONDA MD 90
HONDA Lanser 90
Safari 49cc,
Motor Cycles
விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்
எஸ்.பி.என் மோட்டர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்




IMPORTERS AND DISTRIBUTORS
CENTRAL CYCLE STORES
#93, DAM STREET COLOMBO.12 TEL-011 2338220 FAX-011 2338626

# முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது



(கொச்சி)

இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக் கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி முதல் கட்டமாக டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

இதில் இந்தியா 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

அடுத்து இரு அணிகளும் மூன்று ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகின்றன. இதில் முதல் போட்டி கொச்சியில் நேற்று நடக்க இருந்தது.

ஆனால் நேற்று முன்தினமிரவு பெய்த மழையால் மைதானம் குளம் போல காட்சி அளித்தது.

நேற்றுக் காலை 9 மணிக்கு மைதானத்தை நடுவர்கள் ஆய்வு செய்தனர். அப்போது பந்துவீச்சாளர்கள் ஓடிவரும் பகுதி மற்றும் எல்லைக் கோடு அருகே மிகவும் ஈரமாக இருந்தது தெரியவந்தது.

மீண்டும் 11 மணிக்கு மைதானத்தை பார்வையிட நடுவர் முடிபு செய்தனர். தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஊழியர்கள் மிக தீவிரமாக இறங்கினர்.

இந்த நேரத்தில் காலை 10.20 மணிக்கு மீண்டும் மழை பெய்ய சிக்கல் ஏற்பட்டது.

இறுதியில் ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் போட்டி கைவிடப்படுவதாக கிறிஸ் பிராட் அறிவித்தார்.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் நடைபெறுகிறது.

# விரைவில் மீள்வேன் சல்மான் பட் சபதம்

(கராச்சி)

சூதாட்ட சர்ச்சைகளிலிருந்து விரைவில் மீள்வேன் என பாகிஸ்தான் வீரர் சல்மான் பட் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட பாகிஸ்தான் அணி 4 போட்



சல்மான் பட்

டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் லோர்ட்சில் நடந்த 4-வது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்களான சல்மான் பட், முகமெட் ஆசிப், முகமெட் அமிர் ஆகியோர் ஸ்பாட் பிக்சிங் எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவர்கள் மூவரையும் ஐ.சி.சி. இடைக்கால நீக்கம் செய்துள்ளது. இந்நிலையில் இவர்கள் மூவரும் தடையை நீக்குமாறு ஐ.சி.சியிடம் மேல் முறையீடு செய்துள்ளனர். இதனையடுத்து இவர்கள் மீதான விசாரணை எதிர்வரும் 30 ஆம் திகதி தோகாவில் நடக்கவுள்ளது. இதுகுறித்து சல்மான் பட் கூறியதாவது, இங்கிலாந்துத் தொடரின் போது சூதாட்டப்பிரச்சினையில் சிக்கியது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. இதன் மூலம் புதிய பாடத்தைக் கற்றுக்கொண்டேன் எதிர்வரும் 30 ஆம் திகதி தோகாவில் நடக்கும் 'ஐ.சி.சி விசாரணையில் நல்ல முடிபுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன்.

தற்போது தினமும் 2 மணிநேரம் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். விரைவில் அணிக்கு திரும்புவேன் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு சல்மான் பட் தெரிவித்தார்.

# பங்களாதேஷ் தொடரைச் சுவைத்தது; நியூசிலாந்து அணி போராடி சளைத்தது

(மிர்பூர்)

ரூபெல் ஹுசைனின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் பங்களாதேஷ் அணி 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் பங்களாதேஷ் அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 4:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

பங்களா தேஷிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடியது.

இதில் இரண்டாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட முதலாவது, மூன்றாவது, நான்காவது போட்டிகளில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது.



இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 44.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 174 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் சகிப் அல்ஹசன் 36 ஓட்டங்களையும் இம்ரூல் ஹயிஸ் 34, முஸ்பிகர் ரகீம் 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் அணித்தலைவர் டானியல் விக்டோரி, மில்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மைக்கேய், எல்யோட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 175 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 49.3 ஓவர்களில் 171 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகலவிக்கெட்டுக்களையுமிழந்து 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் எலியோட் 59 ஓட்டங்களையும் அணித்தலைவர் டானியல் விக்டோரி 43, மில்ஸ் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ரூபேல் ஹுசைன் 4 விக்கெடுக்களையும் அப்துர் ரஷாக். அணித் தலைவர் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் பங்களாதேஷ் அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 4:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இப்போட்டியில் பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த ரூபெல் ஹுசைன் ஆட்டநாயகனாகத் தெரிவானதுடன் பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் தொடர் நாயகன் விருதை வென்றார்.

# ஐ.சி.சி. பெண்கள் இருபது-20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சம்பியன்




சர்வதேச கிரிக்கெட் சபை நடத்திய ஐ.சி.சி. பெண்கள் இருபது-20 சலெஞ்ச் சுற்றுப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் பெண்கள் அணி சம்பியனாகியது. நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இலங்கை அணியை 8 விக்கெட்டுக்களால் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காவில் கடந்த 14ஆம் திகதி முதல் நடைபெற்ற இத்தொடரில் தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான், அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய 6 அணிகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை பெண்கள் அணித்தலைவி சசிகலா சிறிவர்த்தன, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை பெண்கள் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 83 ஓட்டங்களையே பெற்றது.

அதிகபட்சமாக சமரி பொல்கம்பொல 20 ஓட்டங்களைப் பெற்றார். இலங்கை பெண் கள் அணி வீராங்கனைகள் நால்வர் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் பெண்கள் அணி 10.4 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது. டியன்ட்ரா டோட்டின் 21 பந்துகளில் (2 சிக்ஸர் 5 பவுண்டரிகள் உட்பட) 39 ஓட்டங்களைப் பெற்றார். இறுதிப் போட்டியின் சிறந்த வீராங்கனையாக டியேன்ட்ரா டோட்டின் தெரிவானார்.

இத்தொடரில் மூன்றாமிடத்துக்கான போட்டியில் பாகிஸ்தான் பெண்கள் அணியை தென்னாபிரிக்க பெண்கள் அணி 6 விக்கெட்டுக்களால் வென்றது. 5-ம் இடத்துக்கான போட்டியில் நெதர் லாந்து பெண்கள் அணியை அயர்லாந்து பெண்கள் அணி 42 ஓட்டங்களால் வென்றது.

# தமிழ் மக்களுக்கு 13வது சட்டமூலத்தை விடவும் சிறந்த அதிகாரப்பகிர்வை வழங்க அரசு கவனம்

## இந்தியாவில் அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(புதுடில்லி)

தமிழ் மக்களுக்கு 13-வது திருத்தச் சட்டத்தை விடவும் சிறந்த ஓர் அதிகாரப் பகிர்வு பொறிமுறையை வழ்ங்குவது குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சகல பிரஜைகளுக்கும் சம உரிமை வழங்கப்படும் வகையிலான அதிகாரப் பகிர்வு யோசனைத் திட்டமொன்றை முன்வைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற ஆர்.கே.மிஷ்ரா நினைவுப் பேருரையில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

12 ஆவது திருத்தச் சட்டடத்தின் ஊடாக கணிசமானளவு அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனைவிடவும் சிறந்ததோர் அதிகாரப்பகிர்வுப் பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும். அதன்ட மூலம் சகல சமூகங்களினதும் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

பொருத்தமான அதிகாரப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

தொகுதிவாரி மற்றும் விருப்பத்தெரிவு முறைமையுடன் கூடிய தேர்தல் முறையொன்று அறிமுகப்படுத்தப்படவேண்டும். தற்போதைய தேர்தல் முறைமையின் ஊடாக சவால்களை எதிர்கொள்ள முடியாது.

13ஆவது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தல் மற்றும் அதிகாரப் பகிர்வு குறித்த அரசியல் தீர்வுத் திட்டமொன்றைமுன் வைத்தல் ஆகியவற்றுக்கு காலவரையறைகள் நிர்ணயிக்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

## நடுவானில் விமானி மரணம்; 260 பயணிகள் உயிர் தப்பினர்

வானில் பறந்துகொண்டிருந்த கட்டார் ஏர் வேஸ் விமானத்தின் விமானி, நடுவானில் திடீரென இறந்தார். எனினும் உதவிவிமானி சாதுரியத்தால் விமானத்தில் பயணம் செய்த 260 பயணிகளும் உயிர்தப்பினர்.

இந்நிகழ்வு நடந்ததை யாரும் அறியா வண்ணம் விமானத்தை உதவி விமானி கோலாலம்பூர் விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கினார். இச்சம்பவம் பயணிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

டில்லியைச் சேர்ந்த அஜய் குக்ரேஜா (43) கட்டார் ஏர்வேசில் பைலட்டாக பணியாற்றி வந்தார். இவர் பிலிப்பையின்ஸ் நாட்டின் தலைநகரான மணிலாவிலிருந்து கட்டார்நாட்டின் தலைநகர் தோகாவுக்கு கியூஆர் 645 விமானத்தை இயக்கினார்.

மணிலாவில் இருந்து 260 பயணிகளுடன் விமானம் புறப்பட்டது. புறப்பட்டு சிறிது நேரத்தில் விமானிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. இதுகுறித்து அருகேயுள்ள கோலாலம்பூர் விமானநிலையக் கட்டுப்பாட்டு அறைக்கு உதவி விமானி தகவல் தெரிவித்தார்.

மேலும் விமானநிலையத்தில் அவசரசிகிச்சைக்கான ஏற்பாடுகளை செய்து தரும்படியும் கூறினார். இதையடுத்து விமானம் கோலாலம்பூரில்தரையிறக்கப்பட்டது. உடனடியாகவிமானிக்கு சிகிச்சையளிக்க டாக்டர்கள் விமானத் துக்குள்வந்தனர். அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர். (ந-5)

## கைலாகு கொடுக்கச்...

பிரித்தானிய இளவரசர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுக்கு அருகிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அமர்ந்திருந்தார்.

இதன்போது வருகைதந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் கைலாகு செய்ய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெரும் ஆர்வத்துடன் சென்ற போதும்,மன்மோகன் சிங் அதனை பெரிதாக கண்டு கொள்ளவில்லை.

இது இந்த விழாவில் கலந்து கொள்ள வந்த 65 ஆயிரம் பார்வையாளர்கள் மற்றும் இந்நிகழ்வை உலகம் முழுவதும் தொலைக் காட்சியில் பார்வையிட்ட கோடிக்கணக்கான தமிழ் மக்கள் மத்தியில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவமானப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நிகழ்வில் விசேட விருந்தினராக ஜனாதிபதி அழைக்கப்பட்டதாக முன்னர் பிரசாரம் செய்யப்பட்டபோதும், அவருக்கு இந்த நிகழ்வில் உரையாற்றுவதற்கேனும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், அவர் சிறப்பதியாக அழைக்கப்படவில்லை என்பதும், அவருக்கு உரையாற்ற வாய்ப்பளிக்கப்படவில்லை என்பதும் ஜனாதிபதிக்கு பலத்த அவமானத்தை ஏற்படுத்தியுள்ளதாக சண்டே லீடர் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-5)

## வட மாகாண...

கொள்ளவுள்ள அபிவிருத்தித்திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவிப்பார் என தெரிவிக்கப்பட்டது. (ந-5)

## சுவரொட்டி...

தளபதி சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டமைக்கு எதிராக மேற்கொள்ளப்பட் சுவரொட்டிப் பிரசார நடவடிக்கைகளுக்கு எதிர்க் கட்சிகளுக்கு அரசாங்கத்தால் விடுக்கப்பட்டுள்ள தடைகளை அக்கட்சி வெற்றி க்ரமாக தாண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-5)

## விடுதலைப் புலிகள் வெளி...

இது தொடர்பாக அவுஸ்திரேலியன் பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் புகலிடம் கோருவோரின் படகுகள் இலங்கையிலிருந்து புறப்படுவதை கடற்படையினரும் பொலிஸாரும் தடுத்துள்ளனர்.

அரசியல் புகலிடம் கோருவோர் இங்கிருந்து அண்மைக் காலத்தில் படகுகள் மூலம் சென்ற ஒரு தனி சம்பவம் கூட இடம்பெறவில்லை.

மாறாக மூன்றாவது நாடொன்றுக்கு விமானம் மூலம் பயணம் செய்து அங்கிருந்தே அவர்கள் புறப்படுகிறார்கள் எனவும் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார்.

புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் கோருவதற்கு காரணம் எதுவுமில்லை.

அச்சம் காரணமாக இலங்கையை விட்டு எவரும் வெளியேறுவதற்கான காரணமில்லை.

அவர்கள் எங்கு வேண்டுமானாலும் வசிப்பதற்கு சுதந்திரம் உண்டு.

எவருக்கேனும் புகலிடம் வழங்கும் போது அவுஸ்திரேலிய அரசாங்கம் மிகக்கண்டிப்பாக நடந்து கொள்ள வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட பின்னர் சிலக்குழுக்கள் வேறுவகையில் போராட்டத்தை ஆரம்பிக்க முற்படுகின்றனர்.

அவர்கள் வெளிநாடுகளில் அணி திரளக் கூடும்.

எனவே அவுஸ்திரேலிய அரசாங்கம் இவ்விடயத்தில் தனது புலனாய்வுத்துறைகளை ஈடுபடுத்துவதில் மிகக்கவனமாக இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-5)

## இலங்கையில் பயங்...

படுத்தி உள்ளது. இலங்கையில் பயங்கரவாத இயக்கங்களுக்கு பயிற்சி முகாம் உண்டு என்பது எல்லாம் பொய் என்று கூறினார்.

இந்தியாவின் மகாராஷ்டிர மாநிலத்தின் பூனே நகரத்தில் அமைந்திருந்த ஜேர்மனிய பேக்கரி ஒன்றுக்கு கடந்த பெப்ரவரி மாதம் வெடிகுண்டு வைக்கப்பட்டது.

இக்குண்டு வெடிப்பு சம்பந்தமாக அம் மாநில பொலிஸாரால் மிர்ஷா கிமயஷ் (29) என்பவர் கடந்த மாதம் 07ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

அவர் கொழும்பில் உள்ள பயிற்சி முகாம் ஒன்றில் பயிற்சிகளைப் பெற்றிருந்தார் என்று பொலிஸாருக்கு கூறி இருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## நோர்வே அரசாங்கம் நெடி...

இருக்கும் நெடியவனை உடனடியாக இலங்கைக்கு நாடு கடத்தும் முயற்சியில் இலங்கை அரசு இறங்க வேண்டும் .

எனினும் நெடியவனை கைது செய்வதிலோ அன்றி இலங்கைக்கு நாடு கடத்தும்படி நோர்வேயிடம் கோரிக்கை விடுவதிலோ நடவடிக்கை எடுக்க அரசு தவறி விட்டது.

சர்வதேச ஆட்கடத்தல் நடவடிக்கைகள் உடன் நெடியவனுக்கு தொடர்பு உண்டு. அதேநேரம் நெடியவன் பயிற்சி பெற்ற ஓர் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்.

சர்வதேச சட்டங்கள் அடிப்படையில் நெடியவனை கைது செய்வதற்கான வழிமுறைகள் காணப்படுவதாகவும் இதற்கான முனைப்புகளை அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்த அவர், நோர்வே அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும்எனவும்அரசுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். (ந-5)

## இலங்கைத் தமிழர் விட...


அரசாங்கத்தை தமிழக மக்களும் இலங்கை தமிழர்களும் மன்னிக்க மாட்டார்கள் என்றும் வைகோ சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் போரினால் பட்ட துயரங்களை சித்திரிக்கும் போர் முகங்கள் என்னும், ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி மதுரையில் நடைபெற்று வருகின்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு செய்தியாளரிடம் கருத்துத் தெரிவித்த போதே வைகோ மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ந-5)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்



(ஓய்வுபெற்ற அதிபர்- யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி, உபதலைவர் சைவ வித்தியா விருத்திச் சங்கம் - திருநெல்வேலி, முன்னாள் தலைவர் ப.நோ.கூ.ச.-சாவகச்சேரி)

சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் 16.10.2010 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து கணபதிப்பிள்ளை-அன்னலஷ்மி தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற HINDU BOARD இராஜரட்ணம் செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற யோகாம்பாள் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி )அவர்களின் அன்புக் கணவரும் யசோதா, தயாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணமூர்த்தி (பொறியியலாளர்,கொழும்பு), நவக்குமாரன் (கொமர்ஷல் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளை) ஆகியோரின் மாமனாரும் உபேந்திரன், மாதங்கி, கிருத்திகன், தாரங்கி, தனுரங்கி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருமதி ஞானசௌந்தரி கந்தையா, திருமதி ஞானபூங்கோதை வைரவிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 18.10.2010 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் சரசாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய்' இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் "ஏற்றுக்கொள்ளவும்."

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(சி-1427)

தகவல்:
ந.நவக்குமாரன்
(மருமகன்)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.